ஸ்ரீலங்கா தலைமை அஞ்சலகத்தில் பதிவுபெற்றது

# தர்க்கீதம்

10/11

ஆவணி / புரட்டாசி 1981 ★ மாத இதழ் ★ விலை ரூபா 1-00


# ஈழவர் பிரச்சனைகளும் அண்மைய சம்பவங்களும்

**மலையகம்:**

10,000 ஈழவர் பாதிப்பு
3 000 பேர் அகதிகளாகினர்
16 பேர் தீயில் வெந்து மாண்டனர்
45 பேருக்குப்படுகாயம்
105 லயன்கள், பாடசாலைகள், கடைகளுக்குத் தீவைப்பு

**கிழக்கு:**

1, 300 ஈழவர் பாதிப்பு
900 பேர் அகதிகள்
4 பேர் படுகொலை
45 வீடுகள், பாடசாலைகள், மீனவ வாடிகளுக்குத் தீவைப்பு



அகதிகளில் ஒரு பகுதியினர்

**வவுனியாவை:** 300 ஈழவர் அகதிகள், 7 பேர் படுகொலை
33 கடைகளுக்கும் ஒரு பட மாளிகைக்கும் தீ

யாழ்நகர் எரிந்ததைத் தொடர்ந்து, அம்பாறை — பட்டிருப்பு குடியேற்ற எல்லைக் கிராமங்களில் நடந்த கலவரங்களை அடுத்து மட்டக்களப்பில் நடந்த விளையாட்டுப் போட்டியொன்றில் உருவாகிய கைகலப்பு இனக்கலவரமாகி அம்பாறை மாவட்டத்தில் பல தமிழ் பேசும் மக்களை அகதிகளாக்கி, இலங்கையில் பல இடங்களிலும் தன் கொடூரக் கைகளை நீட்டியது. இலங்கை பூராவும் 58, 77 களில் நடந்த இனக்கலவரம்போல் ஒன்று நடக்காவிட்டாலும், அங்கொன்றும் இங்கொன்றுமாக நடந்தவைகள் நிட்சயமாகத் தமிழ் பேசும் மக்களைப் பாரிய அளவில் பாதித்துள்ளது என்பதில் எதுவித ஐயமுமில்லை.

## பெரும் பாதிப்பு?

கடைகள் பல எரிக்கப்பட்டாலும், இம்முறை தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டவர்கள் சாதாரண தமிழ் பேசும் மக்கள் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. தம்மை இந்த மண்ணிற்கே அர்ப்பணித்து மண்ணோடு மண்ணாகி, இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய பங்களித்து அன்றாட வாழ்க்கைக்காக தம் உழைப்பை விற்கும் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களே இம்முறை கொடூரமாகத் தாக்கப்பட்டார்கள் என்பதை, சில சமயம் சிவதர்ம வள்ளல்களும், சீர்திருத்த வாதிகளான தொழிற் சங்கங்களும், அரசியல் அடகு வைக்கும் சுயநல அரசியல்வாதிகளும் புறக்கணித்து விடலாம்; ஆனால் மானசீகமாகச் சிந்திப்பவர்கள் யாவரும் இதைப் புரியத் தவறமாட்டார்கள்.

## விமோசன வழி என்ன?

''நாம் ஈழம் கேட்கவில்லை'' தரப்படுத்தலுக்கு எதிராகப் போராடவில்லை, குடியேற்றத் திட்டங்களை எதிர்க்கவில்லை இருந்தும் தாக்கப்பட்டுள்ளோம் ஏன்! என்று கேட்டு அங்கலாய்க்கும் சில தொழிற்சங்கத் தலைவர்கள், தமிழ் பேசும் தோட்டத் தொழிலாளர்கள் ''தாயகம்'' திரும்புவதுதான் அவர்களது விமோசனத்திற்கான மார்க்கம் என்று வியாக்கியானம் செய்கிறார்கள். எதிர்க் கட்சித் தலைவருக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்தின்போது திரு. தொண்டமான் பேசியவைகள்தான் தோட்டத் தொழிலாளர்கள் தாக்கப்பட்டதற்கான முக்கிய காரணி என்று கூறும் இவர்கள், சில தார்ப்பரிய உண்மைகளை அடியோடு மறந்துவிடுகிறார்கள். இனவாதம் இயல்பாக மக்களிடையே எழுந்து அரசியல்வாதிகளூடாக இயங்குவதொன்றல்ல, மாறாக முதலாளித்துவம் தொழிலாளர்களைப்

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

# ஊதிய உயர்வும் மலையக மக்களும்

கடந்த வருடத்தின் நவம்பர் மாதத்தில் இருந்து அரசாங்க, கூட்டுத்தாபன, தனியார் நிலையங்களில் சேவையாற்றுவோருக்கு வழங்கப்பட்ட 70 ரூபா சம்பளஉயர்வு தோட்டத் தொழிலாளரைப் பொறுத்தவரையில் சுமார் 9 மாதங்களாகியும் இன்னும் வழங்கப்படவில்லை. சகலரும் இலங்கைப் பிரசைகளே என்றும், இன, மத, சாதி அடிப்படையில் பாகுபாடு எதுவும் காட்டுவதில்லை என்றும் கூறிவரும் இன்றைய அரசு, இதுவரை தோட்டத் தொழிலாளருக்கு இவ்வூதிய உயர்வை வழங்காது இருப்பதானது இவ் அரசின் தோற்றத்தை நன்கு தெளிவுபடுத்துகிறது.

இச்சம்பள உயர்வு தொடர்பாகத் தோட்டத் தொழிலாளரின் சம்பள நிர்ணய சபை பலமுறை கூடிக் கலந்தபோதும் ஊதிய உயர்வு வழங்க ஆக்கபூர்வமாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டிய தொழிற் சங்கங்கள் ஆகஸ்ட் 10—ம் திகதி கூடும் சம்பளக் கமிஷன் எந்தத் தீர்வையும் தராதபட்சத்தில் 15—ம் திகதி அடையாள வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்போவதாக எச்சரித்தனர். ஆயினும் பயன் எதுவும் கிடைக்கவில்லை. இதனால் 15—ம் திகதி தொழிலாளர் தேசிய சங்கத்தினர் ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தம் மேற்கொண்டனர். இவ் அடையாள வேலை நிறுத்தத்தில் லட்சக்கணக்கான தொழிலாளர்கள் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் கடந்த ஆகஸ்ட் 18—ம் திகதியன்று சுமார் 41 தொழிற் சங்கங்கள் இக்கோரிக்கை தொடர்பாக இணக்கம் கண்டு வேலைநிறுத்தத்தில் குதித்தன. எனினும் நாட்டு நிலைமையைக் காரணம் காட்டி ஜனாதிபதியின் கரங்களை வலுப்படுத்தும்படி தொண்டமானைத் தலைவராகக் கொண்ட இ. தொ. காவும்,

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

**கருத்து மக்களைப் பற்றிக்கொள்ளும்போது, சக்தியாய் உருவெடுக்கும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுதுமட்டுவாளில் சாதித் தீ

தமிழ் பேசும் மக்களிடையே நிலவி வருவதும், நிலவுடைமைச் சமுதாய அமைப்பின் எச்சசொச்சமுமான சாதி அமைப்பு இன்றும் தன் கோரத் தாண்டவத்தை ஆடி முடித்து விடவில்லை. சில வருடங்களுக்கு முன்னர் கைதடியில் இடம்பெற்ற கலவரத்தைத் தொடர்ந்து அண்மையில் எழுதுமட்டுவாளில் சாதிவெறி தன் கோரப்பசிக்கு இரு உயிர்களைப் பலியாக்கியுள்ளது.

கிளிநொச்சிக்குச் செல்லும் பிரதானவீதியில்கொடிகாமத்தில் இருந்து சுமார் நாலு மைல் தொலைவில் அமைந்துள்ள எழுதுமட்டுவாள் கிராமத்தில் வேளாளர், கோவியர், நளவர், சாண்டார்என அழைக்கப்படும் நான்குசமூக மக்களும் வாழ்ந்து வருகின்றனர். இங்கு முக்கிய தொழில்களாக விவசாயம், சீவல் ஆகியன நடைபெற்று வருகின்றன.

அண்மையில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலை அடுத்து இங்குள்ள மக்களிடையே சமூகஉறவில் ஒரு விரிசல் ஏற்பட்டது. இனரீதியாக இனங்காணப்பட்டு அடக்கப்படும் தமிழ்பேசும் மக்களில் ஒருசாரார் சமூகரீதியாக ஆண்டாண்டு காலமாக ஒடுக்கப்பட்டு வருவதனாலும், அவ்வாறு ஒடுக்கப்படுகின்ற மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலிக்கத் தமிழ்பேசும் மக்களின் ஜனநாயகக் காவலர்கள் தவறிவிட்டமையினாலும், ஒட்டுமொத்த தமிழ்பேசும் மக்களின் அடிப்படை சமூக பொருளாதார மேம்பாடுகளைக் கருத்திற் கொள்ளாத 'தமிழ்ஈழக்' கோரிக்கையின் உள் முரண்பாடுகளினாலும் இங்குள்ள நசுக்கப்பட்டு வரும் சமூகத்தைச்சேர்ந்த இளைஞர்கள் சிலர் வேலைவாய்ப்பு, வீட்டு வசதி என்பனகருதி ஐக்கிய தேசியக் கட்சிக் கிளை ஒன்றை நிறுவினர். இந் நடவடிக்கையானது, சில உயர் வகுப்புத் தமிழர்களிடையே எரிச்சலை ஊட்டியிருந்தது என்றும் இதன் பின்னரே தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் தமது கிராம யாத்திரையின் போது இங்கு சகலரும் சமமாக அமர்ந்து ஒரு தேநீர் விருந்திற்கு ஏற்பாடுகள் செய்தனர். அதன்மூலம் நசுக்கப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர்களின் ஆதரவையும் திரட்டமுனைந்தனர். இந் நிலையில் மாவட்ட அபிவிருத்தித் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு வாக்குக் கேட்கப் போனவர்கள் சில கேள்விகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது.

சமூக வாழ்க்கையின் ஒவ்வொரு நடவடிக்கையிலும் திட்டமிட்டுப் புறக்கணிக்கப்பட்டுவரும் இம்மக்கள், தேநீர்சாலைதிறந்து விடப்படுவதாலும், சிகையலங்கரிப்பு நிலையத்தில் சமஉரிமை பெறுவதனாலும் சாதி அமைப்புக்கு முற்றுப்புள்ளி வைக்கப் படலாம் என்ற பிரமையினால் உந்தப்பெற்று அவற்றைத் தேர்தலுக்கு முன்பாகத் திறக்கும்படி கோரினர். அதாவது காலங்காலமாக வாக்களிப்பதைத் தவிர வேறெந்தப் போராட்டப் பாங்கிலும் வளர்க்கப் படாத இம்மக்கள் இம்முறை தமது வாக்குக்குப் பலம்சேர்த்து வாக்களிக்க நிபந்தனை விதித்தனர். ஆனால், தேர்தலின் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறிய தொண்டர்கள் வாக்களிப்பு முடிந்தபின்னால் உள்வீட்டுப் பிரச்சனைகளைத் தீர்த்துக்கொள்வோம் என்றும் கூறினர். இதனால் ஏமாற்றமடைந்த இம்மக்கள் தமது இளம் சந்ததியினரின் ஆலோசனைக் கேற்ப ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிப்பதுஎன முடிவுசெய்தமை சமூகப் பூசல்களின் ஆரம்ப நிலையாகும்.

தேர்தல்முடிவுற்ற சிலதினங்களில் இருதரப்பையும்சேர்ந்த சிலருக்கு இடையே கள்ளுத் தவறணை ஒன்றில் ஏற்பட்ட வாக்குவாதம், சாதி அடிப்படையில் கோஷ்டிசேர வழி வகுத்தது. பின்னர் இது கோஷ்டி மோதலாக வளரத் தொடங்கி ஏற்பட்ட கைகலப்பில் ஒருவர் (உயர்வகுப்பைச் சேர்ந்தவர்) பலத்த காயங்களுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

தொடர்ந்து வளர்ந்த நிலைமைகளில் '' சாதிப்பிரச்சனை'' என்பது ஒருசிலரின் வேலைவாய்ப்புப் பிரச்சனையோ, அல்லது ஒருசிலரின் கல்விவசதிப் பிரச்சனையோ அல்லஎன்பதனை உணர்ந்த இளைஞர்கள், சாதிப் பிரச்சனையைத் தவிடுபொடியாக்குவோம் எனக் கங்கணங் கட்டி நிற்பதாகக்கூறும் சாதிவாத இயக்கங்களின் தலைவர்களைச் சந்தித்தனர். தமிழ் பேசும் மக்களிடையே புரையோடிப்போய்க்கிடக்கும் சாதி வேறுபாட்டின் அடிப்படைபற்றியோ, சாதி சமய பேதமற்ற சமத்துவ சமுதாயத்தைப் படைப்பதற்கான வழிவகைகள் பற்றியோ எந்தத்தெளிவுமில்லாத இத்தலைவர்கள் தமிழ் பேசும் மக்களின் சமூக, அரசியல், பொருளாதார பிரச்சனைகளுக்கான தீர்வு சாதிப்பிரச்சனையின் தீர்விலேயே தங்கி நிற்கிறது என்ற சிந்தனையின் அடிப்படையில், [இம்மோதல்களினைக் கூர்மைபெறச் செய்ய வேண்டுமென விரும்பினர்.

இந்நிலையில் தலையிட்ட விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் எழுதுமட்டுவாளுக்குச் சென்று சமரசம்பேசும் முயற்சிகளில் ஈடுபட்டு சர்ச்சைகளைப் பேச்சுவார்த்தைகளில் தீர்வுகாண ஒரு குழுவும் நியமித்தனர். சாதிப் பிரச்சனை என்பது சமரசப் பேச்சுவார்த்தைகளாலோ அல்லது சமாதானக் குழுக்களாலோ தீர்க்கப்பட முடியாதது என்பதைக் காட்டவோ என்னவோ கடந்த ஜூலை 21-ந் திகதி இருதரப்பு இளைஞர்களுக்கிடையேயும் ஊருக்கு வெளியே ஒரு கைகலப்பு ஏற்பட்டது. இச் சம்பவத்தை அடுத்து சமாதான முறையில் பேச்சுவார்த்தை நடாத்த வரும்படி இருதரப்பு இளைஞர்களையும் சமாதானக் குழு அழைத்தது. ஆனால் நசுக்கப்பட்ட மக்களின் உரிமைகள் பேச்சுவார்த்தைகளால் தீர்க்கப்பட முடியாதவை என்பதை உணர்ந்துகொண்ட நசுக்கப்பட்டுவரும் சமூகத்தைச் சேர்ந்த இளைஞர் பேச்சுவார்த்தைக்குச்செல்லஇணங்கவில்லை. இதன்பின்னர் நசுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த குறிப்பிட்டஇளைஞரின் இல்லத்திற்கு அவரால் தாக்கப்பட்ட இளைஞரின் தகப்பனாரான திரு. சிதம்பரநாதனும், இன்னும் சிலரும் சென்றனர். அங்கு இடம்பெற்ற மோதலில் திரு. சிதம்பரநாதன் பலியானார். இதனையடுத்து நசுக்கப்பட்ட சமூகத்தைச்சேர்ந்தவர்களான நால்வரின் வீடுகள் தீயிடப்பட்டன. கால்நடைகள் வெட்டப்பட்டன.

ஆண்டாண்டு காலமாக ஒடுக்கப்பட்டுவரும் இச் சமூக மக்கள், சமூக நடவடிக்கைகளில் இன்றுவரை சமஅந்தஸ்துப் பெறுதிருப்பமை கண்கூடு. நசுக்கப்பட்டுவரும் மக்கள் எழுச்சிபெற்று எழும்போது ஏற்படக்கூடிய விளைவுகளுக்கு நசுக்கும் கும்பல்களே பதில் சொல்ல வேண்டியநிலை ஏற்பட்டு வருகிறது. நசுக்கப்பட்டு வரும் மக்களின் உரிமைகள் விடயத்தில் வெறும் பேரம் பேசுதலை மேற்கொள்ளுபவர்கள் அரசியல் வேறு தொழில் வேறு என்ற அடிப்படையில் சமுதாய நிகழ்வுகளை வெறும் கிரிமினல் கேசுகளாக(Crimina Case) பார்க்கின்ற நிலைமை எமது எழுதுமட்டுவாள் விவகாரத்தில் தெளிவாகவே தெரிகிறது. இருந்தும் அடக்கப்படுகின்ற உழைப்பாளிகளான இம்மக்கள் தமது உடமைப் பாட்டுப். போராட்டத்தை முன்னெடுப்பதன் மூலம், ஒரு சமத்துவ சமதர்ம சமுதாயத்தைப் படைப்பதிலேயே விடுதலை தங்கி நிற்கிறது என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும்.

# 'தமிழீழத்திற்கு' 6 மாத 'விடுதலை'

வெகு அண்மையில் நடந்த அரசு—கூட்டணி ஒப்பந்த நிகழ்வுடன் கூடவே 'தமிழீழத்திற்கு' 6 மாதகால 'விடுதலை'யும் விடப்பட்டிருப்பதாக வதந்திகள் வரத்தொடங்கின. வதந்திஎன்பது உண்மைகலந்த பொய் என்ற வரையறையில் வைத்துப் பார்த்தால் பல நியாயமான சந்தேகங்களுக்கு மாயமான பதில்களே கிடைக்கப்பெறுகின்றன.

அண்மைய சம்பவங்களின் உந்துதலினால் த.வி. கூட்டணியினர் தமிழ் பேசுவோருக்குப் பாதுகாப்பை ஏற்படுத்த வேண்டுமென்ற வேட்கையில் அரசுடன் நடாத்திய பேச்சுவார்த்தைகளின் பின் வெளிவந்த ஒப்பந்தச் சுருக்கம் இதுதான் :

★ ஜனாதிபதி தலைமையில் உயர்மட்டக் குழு அமைத்தல்

★ வன்செயல்களை முடிவுக்குக் கொண்டுவரச் சகல கட்சிகளையும் தூண்டுதல்.

★ அபிவிருத்திச் சபைகளை முறையாக இயங்க வைக்க முயற்சித்தல்.

இவ்வொப்பந்த அம்சங்களை நோக்கும்போது, வன்செயல்களை முடிவுக்குக் கொண்டுவர வேண்டியதும், அபிவிருத்திச் சபைகளை முறையாக இயங்க வைக்க வேண்டியதும் அரசாங்கத்தின் நேரடியான கடமைகளே ! அத்துடன் இவ்வொப்பந்தத்தில் கூட்டணியின் வேட்கை திட்டவட்டமாக நிறைவு செய்யப்பட்டதாயும் தெளிவாகவில்லை. இதனால் தான் இதற்கு வேறேதும் உள்நோக்கு இருக்கலாமா என்று சந்தேகம் கொள்ள வேண்டியுள்ளது.

தனது தரமற்ற பொருளாதாரத் திட்டங்களினால் பாரிய நெருக்கடிகளை அனுபவித்து வரும் அரசு, சாய்ந்துவரும் தனது நிலையை நிமிர்த்த பல வழிகளிலும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். பொருளாதார நெருக்கடிகளுக்கு நேர்டியான நிவாரணம் கிடைக்கப்பெறாத பட்சத்தில், தனது ஆட்சியையே தொடர்ச்சியாக்க, எதிர்க்கட்சிகளை வலுவிழக்கச் செய்வதோடு, தேர்தலில் வெற்றி பெறத் தமிழ்பேசும் மக்களின் ஆதரவைப் பெறக்கூடிய வழிவகைகளையும் செய்ய வேண்டியிருக்கும். எதிர்க்கட்சிகளைத் தனது சதிநடவடிக்கைகளாலும், தீவிர பிரச்சாரத்தினாலும் ஓரளவு வலுவிழக்கச் செய்துள்ள இன்றைய கால கட்டத்தில், தமிழ் பேசுவோரின் பிரதான கோரிக்கையை வலுவிழக்கச்செய்யும் நடவடிக்கையாகவே மேற்படி ஒப்பந்தத்தைப் பார்க்கத் தோன்றுகிறது. இவ்வகையில் இவ்வொப்பந்தத்தைத் தேர்தல் பின்னணியாக ஊகிப்பதை உறுதிப்படுத்தும் வகையிலேயே அண்மைய தினசரிப்பத்திரிகைகளில் வெளிவந்த '6 மாதத்தில் தேர்தல் ?', 'ஜனாதிபதித் தேர்தல் முறையில் மாற்றம்' போன்ற கேஷ்யங்களை வைத்துப் பார்க்கவேண்டியுள்ளது.

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

# இழி நிலை என் ?

மாற்றானைப் போற்றி வழிபடுவதிலும் எதற்கும் அவனிடமே கையேந்தி நிற்பதிலும் பெருமை அடையும் மனப்போக்கு. கையில் ஒரு மணிக்கூட்டை வாங்கிக் கட்டிக்கொள்வதற்காக நாட்டைவிட்டோடி மாற்றான் நாட்டில் எந்த இழிதொழிலையும் செய்யத் தயாராக இருக்கும் வாலிபர்கள். அதற்கு உடந்தையாக இருக்கும் தாய்மார்கள்.

அதே தமிழன் இன்று ஒரே நோக்குடன் ஒரே சமுதாயமாக இயங்கித் தன்னையே பாதுகாத்துக்கொள்ள முடியாத இழிநிலை. தன்னவனையே மாற்றானிடம் காட்டிக் கொடுக்கும் பயங்கரமான சுயநலம். எதற்குமே உதவாத கருத்துக்களிலும் கோட்பாடுகளிலும் வெறிப்பற்று. நானூறு ஆண்டுகளாகக் கொள்ளையடிப்பையும், அடக்குமுறையையும் நோக்கமாகக் கொண்ட அந்நியராட்சி. நானூறு ஆண்டுகளாக நீடித்த அடிமைத்தனத்தினால் ஏற்பட்ட சிந்தனை நினைவுகளில் கண்மூடிக்கிடக்கும் அவனைப் பிணமென நினைத்து வட்டமிடும் கழுகுகள். அவனைத் தொடர்ந்து தூக்கத்தில் வைத்திருக்கப் பாட்டுப்பாடித் தூங்கவைத்துக்கொண்டு அவன் வீட்டைக் கொள்ளையிடத் தவிக்கும் எத்தர்கள் கூட்டம். அந்த அடக்குமுறைகளிலும், அழிவிலுமிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள அமைத்துக்கொண்ட குறுகிய வாழ்க்கைமுறைகளும், நடைமுறைகளும் என்றுமே நீடித்து நிலைக்கும் ஆபத்து. தமிழர்கள் இன்று உலகிலே சிறந்த கூலிகளெனப் பெயரெடுத்துக்கொண்டு, அடிமைகளாக உழைக்காத நாடுகளே இல்லை. எதற்கும் நான் என்ற அகம்பாவம். ஒத்துப்போக மறுக்கும் வறண்ட சுயகெளரவம். இங்குத் தமிழர் தமது சொந்த நாடென்று கூறிக்கொள்ளும் அதேநாட்டில் மாற்றானிடம் அடிபட்டு, உதைபட்டு, பொருளிழந்து, உடமையிழந்து, மானமிழந்து, கற்பிழந்து, அல்லற்பட்டு இன்னலுற்று, கண்டவன் காலில் விழுந்து காப்பாற்றப்பட்டு அகதிகளாகி முகாமில் தஞ்சம்புகுந்து கப்பலேற்றப்பட்டு அடித்தளங்களில் அங்குமிங்கு [illegible]த் தூங்கிக்கொண்டு கிடக்கின்றனர்.

அருளரின் '' லங்காராணி '' நாவலில் இருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயக் கிராமங்கள்

# பசியால வாடுது

எந்த ஒரு நாட்டிலும் அந்த நாட்டில் வாழும் மக்களின் அத்தியாவசிய தேவைகளில் ஒன்றான உணவுத்தேவையைப் பூர்த்திசெய்ய, அந்தநாட்டின் விவசாய உற்பத்தியை அபிவிருத்தி செய்யவேண்டியது அவசியமாகும். இந்தவகையில் எந்த அரசாங்கம் உணவுத் தேவைக்கான உற்பத்திக்குரிய அநுகூலங்களைத் தேடிக்கொள்ளாமலும், உற்பத்தியைச் சரிவரப் பகிர்ந்துகொள்ளச் செய்து மக்களின் தரத்தை உயர்த்தாமலும் இருக்கிறதோ அது வேண்டப்படாத அரசாங்கமாகிவிடுகிறது. அதை அந்த மக்கள் தூக்கிஎறிவதே ஒரே வழி. அதைத் தூக்கி எறியும்போது இந்த அரசாங்கத்தைப் போன்ற உள்ளமைப்பை உடைய வேறு அரசாங்கங்களையும் மாற்று அரசாங்கமாக வரவிடாது தடுக்கவும் வேண்டும்.

இந்த நிலையில் பொருளாதார நெருக்கடி, வேலையில்லாத் திண்டாட்டம், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு இவை போன்ற பிரச்சனைகளின் பிரதிபலிப்பில் மாறிமாறிவரும் பச்சையான முதலாளித்துவ அரசாங்கங்களும், சோசலிசப் போர்வையிலான முதலாளித்துவ அரசாங்கங்களும் உற்பத்திகள், அபிவிருத்திகளின் அர்த்தங்களைக் குழிதோண்டிப் புதைத்துப் பெரும்பாலான தமிழ் பேசும் மக்களின் வாழ்க்கை விமோசனத்திற்குச் சாவுமணி அடித்து வருகின்றன.

இங்கு தேவையான மூல வளங்கள் இருந்தும், ஆக்கவசதிகள் இருந்தும், அவற்றைப் பயன்படுத்தாத அரசாங்கத்தார் குருட்டுத்தனமாய் மக்களை வாட்டி நாட்டினைப் பாழாக்குகின்றனர். இந்த ஆட்சியர்ளரின் சீர்கேடுகள் நிறைந்த உருப்படியான திட்டங்கள் வகுக்கப்படாத, தகுந்த அபிவிருத்தித் திட்டங்களை ஆராய்ந்து நடைமுறைப்படுத்தாத காரணத்தினால் ஆண்டுதோறும்அடைந்துவரும்பொருளாதார நட்டம் தமிழ்பேசும் மக்களைப் பலவழிகளிலும் பாதித்துவருகிறது.

## அபிவிருத்தி என்றால் என்ன ?

அபிவிருத்தி அபிவிருத்தி என்று வாய்ப்பர்டமாகக்கூறிக் கொண்டுவரும் அரசாங்கங்களெல்லாம் அவற்றின் அர்த்தங்களை அறியாதவையே. உண்மையான அபிவிருத்தி என்றால் என்ன ? அபிவிருத்தியின் தன்மைகளென்ன ? நடைமுறையில் கையாண்டுவரும் அபிவிருத்தி நடவடிக்கைகளின் பொதுவான தன்மைகள் என்ன ?... இவைபோன்ற பல கேள்விகளுக்குரிய பதில்களை அரசாங்கங்கள் அறிந்திருப்பதில்லை. அவர்கள் கூறுவது போல், உண்மையாகவே அவர்கள் அறிந்திருப்பார்களேயாயின் மக்கள்மீது அவர்களுக்கு அக்கறை இல்லைஎன்றே கூறவேண்டும். இந்தக் கசப்பான நடவடிக்கையினை தமிழ்பேசும் மக்களாகிய நாம் ஆழமாக அவதானிக்க வேண்டும். அதற்கு உண்மையான அபிவிருத்தி நடவடிக்கை என்னஎன்பதை அறிய முற்பட வேண்டும். உண்மையாக நாட்டின் அபிவிருத்திஎன்று கூறும்போது, அந்த நாட்டில் வாழ்கின்ற மக்கள் ஒவ்வொருவரினதும் அடிப்படைப் பிரச்சனைகள் தீர்க்கப்பட்டு, அதாவது அத்தியாவசிய தேவைகளான உணவு, உடை, உறைவிடம் போன்றவைகளைப் பெற்று பின்பு அவர்களுடைய அவசிய தேவைகள், பின்பு ஆடம்பரத் தேவைகள் படிப்படியாக அந்தநாட்டில் வாழ்கின்ற ஒவ்வொரு தனி மனிதனும் தனதுஅடிப்படைத் தேவைகள்பெற்று முன்னேற்றமடைவதே அந்நாட்டு அபிவிருத்தி என்பதாகும். சுருக்கமாகக் கூறினால் உணவு, உடை, உறையுளுக்கு வசதியற்று வாழும் அடிப்படைப் பாட்டாளி வர்க்கம் முன்னேற்றமடையும்படியாக அமையும் திட்டங்களே அபிவிருத்தித் திட்டங்களாகும். ஒரு வர்க்கத்தினர் பசியால் வாடிவதங்க, இன்னொரு வர்க்கத்தினர் ஆடம்பரத்துக்குமேல் ஆடம்பரமாக வாழ வழிவகுக்கும் திட்டங்களுக்கு மாநகரங்களில் அவற்றை அலங்கரித்து திறப்புவிழா வைப்பதன்மூலம் உண்மையான அபிவிருத்தியை பெறமுடியாது.

அபிவிருத்தி அபிவிருத்தியென்று கூறித்திரியும் அரசாங்கங்கள், ஒருவர்க்கம் வறுமையில் வாடவும் அதன் சக்தியை உறிஞ்சி இன்னொரு வர்க்கம் பருகும் வகையிலும் வழிசமைத்துக் கொடுக்கக்கூடிய சமூக அமைப்புமுறையில்நின்றுகொண்டு, அபிவிருத்திகளாக நகரப் பாதுகாவலர் நிலையங்கள் கட்டுவதும், நீதிமன்றங்கள் கட்டுவதும், சிறைச்சாலைகளை விஸ்தரிப்பதும், இதர அரச திணைக்களங்கள், பாதைகளை விஸ்தரித்தும், மேலைநாட்டுப் பழைய வாகனங்களை இறக்குமதிசெய்து எண்ணெய் தட்டுப்பாட்டைத் தருவித்தும், நகரங்களில் அமைதியைக் குலைத்தும், உயர் அதிகாரிகளை அளவுக்குமேல் நியமித்தும், மேலதிக அமைச்சுகளை உருவாக்குவதுமான நடவடிக்கைகள் சிலவற்றைச் செய்வதே அபிவிருத்திஎனக் கருதுகிறது. அதேவேளை சாதாரண மக்களின் வாழ்க்கைத் தரத்தில் எதுவித முன்னேற்றமும் ஏற்படுவதில்லை.

இந்த முரண்பாடுகளைக் கொண்ட அமைப்பில் அபிவிருத்தி செய்ய வாய்ப்புக்கள் இருந்தும், அபிவிருத்தி அடையாத நிலையில் இருக்கும் தமிழ் பேசும் மக்களின் பிரதேசங்களில் ஏராளமானகிராமங்கள் உண்டு. அக்கிராமங்களின் வரிசையில் திரிகோணமலை மாவட்டத்திலுள்ள தம்பலகாமம்என்னும் கிராமத்தை எடுத்துக் கொண்டால் அனுபவ ரீதியாகக் சில உண்மைகளைக் கண்கூடாகக் காணமுடியும்.

## தம்பலகாமம் :

பழம்பெரும் தனிவிவசாயக் கிராமமான தம்பலகாமத்தில் நெற்செய்கையே பெருமளவில் செய்யப்படுகிறது. மொத்தம் 4240 ஏக்கர் நிலத்தில் நெற்செய்கை செய்யப்படுகிறது.

இங்கு : தனிஉடமை நீர்ப்பாசன வயல்கள் 4,000 ஏக்கர். குடியேற்ற நீர்ப்பாசன வயல்கள் 240 ஏக்கர். கோணேசர் கோவிலுக்கு சொந்தமான வயல்கள் 500 ஏக்கர். இவ்வளவு நீர்ப்பாசன காணிகளும் சங்கிலித் தொடராக ஒருங்கே அமைந்திருக்கின்றன. இங்கு இரண்டுபோகம் நெற்செய்கை செய்யப்படும்.

திலகம்

## நீர்ப்பாசனப் பிரச்சனை:

இந்தக் காணிகளுக்கு கந்தளாய்க் குளத்திலிருந்து நீர் வழங்கப்படுகின்றது. தண்ணீர் செல்லுகின்ற காடிகள், வாய்க்கால்கள் ஒழுங்கான முறையில் இல்லாதமையினால் தண்ணீரை உரியஅளவிற்குப் பாய்ச்சிக் கொள்ளமுடியாமல் விவசாயிகள் பெரிதும் கஷ்டப்படுகின்றனர். தண்ணீர் வருகின்ற வழியில் இருக்கும் வயல்களுக்குரிய வயல்காரர்கள் இடையில் தண்ணீரை மறித்துத் தங்கள் வயல்களுக்கு நீரைப் பாய்ச்சுவார்கள். இதனால் பின்னால் உள்ள இதரவயல்கள் நீரின்றி பாதிப்படையும். இதே இடங்களுக்கு உரிய அளவிலான சீமெந்துக் காடிகள் கட்டப்பட்டு மேலதிக தண்ணீர் அடுத்துள்ள வயல்களுக்குப் போகக்கூடிய அளவு வாய்க்கால்கள் தயார் செய்யப்பட்டிருந்தால் விவசாயிகளுக்கு நீர் பாய்ச்சல் பிரச்சனைகளால் விவசாயம் பாதிக்கப்பட மாட்டாது. சிலகாலங்களில் வயல்களுக்குத் தண்ணீர் வந்தாலும் வெள்ளம்போன்று மேலே வயல்களிலெல்லாம் பரவிக்கொண்டு வந்து பயிர்களை மூடி வேளாண்மைகள் அழுகும். சிலவேளைகளில் தண்ணீரே இல்லாமல் வேளாண்மைகள் கருகிச்சாகும். தேவை நேரம் உரியஅளவிற்குத் தண்ணீர் பாய்ச்சவும் தேவையற்ற வேளை தண்ணீரைத் தடை செய்யாது வடிவாய்க்கால்கள் மூலம் வெளியே அனுப்பவும் முடியாமல் திண்டாடவேண்டி உள்ளது. வடிவர்ய்க்கால்கள் ஒன்றேனும் தம்பலகாமத்தில் இல்லை. வயல்களில் தண்ணீரை வடித்து விதைக்கவேண்டிய காலங்களில் வயல்காரர்கள் நினைத்தநேரம் தண்ணீர் வடிய மாட்டாது. இதனால் ஒரு ஒழுங்குமுறையில் நெற்பயிர்ச் செய்கையைச் செய்ய முடியாதுள்ளது.

## உழவுப் பிரச்சனை :

எருமை மாடுகளைக்கொண்டுதான் உழவு வேலைகள் செய்யப்படும். ஆனால் இவற்றைப் பராமரிக்க மந்தைமேய்ச்சல் நிலம் இல்லை. இக்குறையை நிவிர்த்தி செய்யும் வகையில் போதிய உழவு இயந்திரங்கள் தானும் இல்லை. குறைவான உழவு இயந்திரங்கள் இருந்தும் அவற்றை இயக்குவதற்குத் தம்பலகாமத்தில் போதிய எரிபொருள் பெறக்கூடிய ஏற்பாடுகள் இல்லை. அயல் பட்டணங்களான திருகோணமலைக்கு எண்ணெய் பெற அலையவேண்டும். இயந்திர உதிரிப்பாகங்கள் பெற இடங்கள் இல்லாததால் கொழும்பு, குருநாகல் போன்ற நகரங்களுக்குச் செல்லவேண்டும். இதனால் வேலைகள் ஸ்தம்பிதமடைகின்றன.

## பசளைப் பிரச்சனை :

எண்ணெய்கள் மட்டுமல்ல, பசளைவகைகள்கூட எல்லா நரகங்களிலும் கிராமத்தில் கிடைப்பது அரிது. ஒருசிலமுதலாளிகளிடம் இருந்தால் அவர்கள் கொள்ளை இலாபம் அடிப்பார்கள். இந்தநிலையில் அயல் கிராமங்களுக்குச் சென்று கொள்வனவு செய்யும்போது 100 ரூபா பெறுமதியான பொருளுக்கு 150 ரூபா. பொழுதும் பிரயாசையும் வீணுக்க் கழிகின்றன.

## கடன் தொல்லை :

ஏழை விவசாயிகள் விவசாயம் செய்ய முனையும்போது பணப்பிரச்சனை பெருமளவில் தலைதூக்குகின்றது. விவசாயக் கடன் வசதிகளை உரியமுறையில் கொடுப்பதில்லை. விதைப்பிற்கு வழங்கவேண்டிய கடனை காலதாமதமாக்கி அறுவடையின்போதே கிடைக்கிறது. இதனால் விதைப்பிற்கு வேண்டிய பணத்தை முதலாளிகளிடம் வட்டிக்கு வாங்கவேண்டிய சூழல் உருவாகிறது. அறுவடைக் காலங்களின்பின் வரும் வருமானம் விதப்பிற்குப் பெற்ற கடனையும் வட்டியையும்கட்டவே போதுமானது. பிரயோசனமில்லாத காலங்களில்தரும் விவசாயக்கடனை ஈடுசெய்ய வழியில்லாமல் இருக்கையில், அவற்றை பாங்கில் பசளைகளையும், எண்ணைகளையும் அது உபயோகிக்கப்பட முடியாதகாலத்தில் திணிப்பார்கள். இவற்றை விவசாயிகள் அரைவிலை கால் விலைக்கு முதலாளிகளிடம் விற்பார்கள். கடன் கட்டும் காலங்களில் விவசாயக்கடன் வட்டியுடன் பெருகியிருக்கும். இதனை ஈடுசெய்ய முடியாமல் விவசாயிகள் திண்டாடுகையில் கடனை வழங்காமல் ரத்துச் செய்து விடுவார்கள்.

இந்த நிலையில் முதலாளிகள் போடியார்கள் தாம்செய்கின்ற வேளாண்மைக்கு நேரத்திற்கு நேரம் செய்யவேண்டிய பரிகாரங்களையும்காலத்துக்குக்காலம் செய்யவேண்டிய பராமரிப்புச் செலவுகளையும் செய்து கூடுதலான விளைச்சலைக் காண்கின்றனர். நடுத்தர விவசாயிகள் ஏதோ ஒரு வகையில் கடன்களைப் பெற்று விதைத்துவிட்டு தொடர்ந்து செய்யவேண்டிய பராமரிப்புச் செலவுகளுக்குப் பணமில்லாமல் முதலாளிகளிடம் கடன்பெற அடகுவைக்கப் பொருட்கள் (நகைகள்) இல்லாமல்போகவே வேளாண்மையில் விளைச்சலைப் பெறமுடியாதவர்களாகின்றனர். இந்நிலையில் ஏழைகளோ முதலாளிமார்களுக்கும், போடியார்களுக்கும், நடுத்தர விவசாயிகளுக்கும் கூலிக்கு மரரடிப்பார்கள்.

## அரசுகள் ஏன் இருக்கின்றன ?

இவ்வாறாக விவசாயிகள் உழவு இயந்திர வசதிகளற்றும் கடன் வசதிகளற்றும் நீர்ப்பாசனம் பசளைகள் போன்ற வசதிகளற்றும் நடுத்தெருவில் நிற்கையில் முதலாளிகளும்,போடியர்களும் காலத்துக்குக் காலம் இருந்த இடத்திலேயே அனைத்தையும் பெறக்கூடிய வகையிலேயே அரசாங்கங்கள் செயற்படுகின்றன. அரசாங்க அங்

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழவர் இடர் தீர...

ஈழத்திற்கு வெளியே பல நாடுகளிலும் சிறப்பாக இங்கிலாந்தில் இலங்கைத் தமிழ் பேசும் மக்களுடைய பிரச்சனை பற்றி வெகுவாகப் பேசப்பட்டு வருகிறது. இலங்கைத் தமிழர் அல்லாதோர் இன்று இலங்கையில் வாழும், இரு தேசிய இனங்களான சிங்கள - தமிழ் பேசும் இனங்களிடையே ஒற்றுமையின்மை நிலவுவதையும், அத்தோடு ஒற்றையரட்சி அடிப்படையில் பெரும்பான்மையினராகிய. சிங்கள இன மக்களின் எதேச்சாதிகார அரசாங்கம் தமிழ் பேசும் மக்களை ஒரவஞ்சகமாக இன ஒடுக்கல் செய்து வருவதையும் அறிந்து அதில் அக்கறையும் காட்டி வருகிறார்கள்,

மொழிவாரி இனங்களின் ஆதர்ச உரிமைகளில் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்ட அணி சேரா நாடுகளும், சுதந்திரத்துக்கும் சுய நிர்ணயத்திற்கும் போராடி வரும் இயக்கங்களும் ஈழவர்மீது சதோதரப் பற்றும் தோழமைப் பாங்கும் கொண்டுள்ளமை காணக்கூடியதாக உள்ளது. இதற்குக் காரணம் தமிழ் பேசும் மக்களின் பிரச்சனையை தர்க்கிக அடிப்படையில் அணுகி அவர்கள் பிரச்சனைக்கு நிரந்தர பரிகாரம் அவர்களுக்கென ஒரு ''தேசிய அமைப்பு'' (Statehood) நிறுவுவதே என்ற வாதத்தை உலகில் உள்ள முற்போக்கு சக்திகள் ஏற்றுக்கொள்வதே.

தமிழ் பேசும் மக்களின் பிரச்சனை ஒரு சர்வதேசப் பிரச்சனையாக உருவெடுத்து உள்ளது. ஆனால் தமிழ் பேசும் மக்கள் ஒரு தேசிய இனம் என்பதையும், அவர்களுக்கு சுய நிர்ணய உரிமை மறுக்க முடியாத உடைமை என்பதையும் தமிழரல்லாத இலங்கையரும், இலங்கையரல்லாத ஏனையோரும் ஒப்புக்கொண்ட போதிலும் அவர்கள் தத்தமது வர்க்கப்பாட்டு நலன் சார்ந்த அடிப்படையிலேயே தமிழ் பேசும் மக்களின் சுய நிர்ணய உரிமையையும் அதற்கான மார்க்கத்தையும் அணுகிறார்கள். தனியாக இதை ஆழமாகப் பார்ப்போம்.

முதலில் ஜே. வி. பியின் கருத்தையும், தோழர் ரோகணவின் கண்ணோட்டத்தையும் பார்ப்போம். தோழர் ரோகண ஒரு புரட்சிவாதி. இவர் ஒரு மார்க்சீச சிந்தனையாளர். இவ்வகையில் ஒரு புரட்சியை ஏற்படுத்த வேண்டுமென்று அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர் மட்டுமல்ல, 1971–ல் ஒரு கிளர்ச்சியை உண்டுபண்ணியவர்களில் ஒருவருமாவார்.

ஆனல் சிந்தனை வேறு; செயல்முறை வேறு; புரட்சி வாதம் வேறு; புரட்சிப் பாதை வேறு. இவை இரண்டும் இணையும்போதுதான் ஒரு யுகப்புரட்சி உருவெடுக்க முடியும். இதை அவர் கடந்தகாலத்தில் உணரவில் என்பதை அவரே ஒப்புக்கொள்கிறார். இல்லாவிட்டால் நல்ல முறையில் உருவாக்கப்பட இருந்த ஒரு யுகப் புரட்சியை (Revolutionary Epoh) வெறும் கிளர்ச்சியாக (Uprising or insurgency) முடிக்கக் காரணகர்த்தாவாக இருந்திருக்கமாட்டார்.

இதற்கு அடிப்படைக் காரணங்கள் பல. ஆனல் தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரையிலான ஒரு முக்கிய காரணத்தைக் குறிப்பிட வேண்டும்.

நாடு தழுவிய போராட்டம் (National Struggle) அல்லது மக்கள் எழுச்சி வேறு; யுகப் புரட்சி அல்லது மக்கள் புரட்சி வேறு. இவற்றிற்கான அடிப்படை விபரங்களையும் வேறுபாடுகளையும் 1969 தொடக்கம் 1971 வரை தோழர் ரோகண நன்கு புரிந்துகொண்டிருக்கவில்லை. மக்கள் புரட்சியே நாடு தழுவிய கிளர்ச்சி என்று கருதி அந்நாடு தழுவிய கிளர்ச்சி சிங்கள மக்களின் எழுச்சி என்ற சிந்தனையில் திக்குமுக்காடியவர். இதனலேயே 1971 கிளர்ச்சி வெறும் சிங்கள இளைஞர்களின் எழுச்சியாக முடிந்தது. 1971-ல் ஏற்பட்ட எழுச்சியில் தமிழ் இளைஞாகள் பங்குபற்றவில்லை, அதற்கான காரணம் அக்கிளர்ச்சி எண்ணத்திலும், உருவெடுப்பிலும் நாடு தழுவிய கிளர்ச்சியாக உருவெடுக்காமல் சிங்கள இளைஞர்களின் அபிலாசைக் கிளர்ச்சியாகவே உருவெடுத்தது. இதற்குத் தோழர் ரோகண போன்றவர்கள் காரணகர்த்தாக்களாக இருந்தபோதிலும் தமிழ் இளைஞர்களும் பொறுப்பாளிகள் என்பதை மறுக்கமுடியாது. தமிழர்களின் அரசியல் இதுவரை காலமும் வெறும் தமிழ் இனப் பற்றுக்கு உட்பட்டு வந்தமையால் இடதுசாரிக் கொள்கையோ தர்க்கிக சித்தாந்தமோ ஊடுருவ இடமளிக்காத அளவுக்கு வெறும் இன உணர்ச்சி வலுப்பெற்றிருந்தது.

சிங்கள மக்களிடத்து எவ்வளவு தூரம் சிங்கள தீவிரவாதம் வலுப்பெற்று இருந்ததோ; அவ்வளவு தூரம் வகுப்பு வாதமும் வலுப்பெற்று இருந்தது. இதனலேதானே, என்னவோ ஜே. வி. பியினர் நாடு தழுவிய புரட்சிக்கு அடிகோலாமல் சிங்கள கிளர்ச்சிக்கு வழிவகுத்தனர். இங்குதான் தோழர் ரோகண போன்றவர்களின் சித்தாந்தத்தின் சூனியத்தையும், அவர்கள் புரட்சிப் பாதையின் சூட்சுமத்தையும் புரிந்துகொள்ள முடிகிறது.

ஒவ்வொரு போராட்டமும் வர்க்கப் போராட்டமே என்றான் வித்தகன் மார்க்ஸ். இந்த அடிப்படை உண்மையை மறந்துவிடக்கூடாது. ஆகவே நாடு தழுவிய அடிப்படையில் புரட்சி காண விரும்புவோர் தமிழர் – சிங்களர் என்ற இன வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு சாதி சமயமற்ற முறையில் வர்க்க ரீதியில் ஒடுக்கப்படும் வர்க்கத்தினரின் உரிமைக்காக மட்டுமேயல்லாமல் அவர்கள் சமூக உடமைக்காக்வும் போராட முனைந்திருக்கவேண்டும். அந்த வகையில் போராட முனையும்போது மலையகத் தோட்டத் தொழிலாளரை அப்போராட்டத்தின் பொதுவலராகவும் முன்னணியினராக்வும் உருவாகியிருக்க வேண்டும். இது 1971-ல் நடந்த கிளர்ச்சியில் நடைபெறவில்லை. ஜே. வி. பி. தோழர்களின் தெளிவற்ற சிந்தனையையும், திரிகரண சுத்தியற்ற லட்சியத்தையுமே அது எடுத்துக் காட்டுகிறது. அவர்கள் நிட்சயமாக மார்க்சீயவாதிகள். ஆனல் புரட்சிப் புரவலர் லெனின் கூறியது போல் இந்த மார்க்சீயவாதிகளெல்லாம் சமூகக் கிராதகர்கள் என்ற அவதானிப்புக்கு எடுத்துக் காட்டாகின்றார்கள். இந்தத் தவறை தமிழர் விமோசனம் என்ற பெயரில் சில கிராதகக் குழுக்கள் புரிந்து வருவதை காணக்கூடியதாக இருக்கின்றது. ஜே. வி. பியினர் ஏனைய சிங்கள இடதுசாரிகள் செய்த தவறையே செய்துள்ளனர். இவர்கள் தோட்டத் தொழிலாளர்களை வர்க்க அடிப்படையில் அணுகாமல் வெறும் இன ரீதியாகக் கண்டு அவர்களை வர்க்கப் போராட்டத்திற்கு உட்படுத்தாமல் விலக்கி வைத்தே வந்துள்ளார்கள்.

இதற்கு சிங்கள இடதுசாரிகளையும் புரட்சிவாதிகளையும் சாடும்போது மலையகத் தோட்டத் தொழிலாளரல்லாத இந்திய வம்சாவளியினரையும் பொறுப்பாளிகளாக்க வேண்டும். இங்கு தோட்டத் தொழில்ாளர்களுக்கும், இந்திய வம்சாவளியினருக்கும் இடையே உள்ள தார்ப்பரிய வேறுபாட்டை உணர வேண்டும்.

மலையகத் தோட்டத் தொழிலாளிகளிகள் வம்சாவளிகள் அல்ல. ஆங்லேயர் காலத்தில் அடிமைத் தொழிலுக்குப்பின் உருவான கூலி அடிப்படையில் இலங்கையில் குடியேற்றப்பட்டவர்களே ஒழிய வந்தேறு குடிகள் அல்ல. குடி


# ஈரானில் தொடரும் நிரந்தர தீர்வுஏற்படுமா?

பல ஆண்டு காலமாக அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கைப் பொம்மை நாடாகத் திகழ்ந்துவந்த ஈரானில், சில வருடங்களுக்கு முன்பு ஏகாதிபத்தியத்திற்கெதிரான எழுச்சியின்மூலம் மன்னர் ஷா தூக்கியெறியப்பட்டமை நினைவிற்கொள்ளவேண்டியவை. ஏனெனில் ஈரானின் வரலாற்றில் ஒரு திசை திருப்பத்தை இது ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், ஈரானில் உண்மையான மக்கள் புரட்சி நடந்ததா ? எனக் கேட்கும்போது, இல்லை என்றே கூறவேண்டும். அப்படி உண்மையான மக்கள் புரட்சி ஏற்பட்டிருந்தால் தொடர்ந்தும் ஈரானில் ஆட்சிமாற்றங்களும் படுகொலைகளும் ஏற்படக் காரணமில்லை. இந்த வரிசையில்தான் அண்மையில் ஜனாதிபதி அலிராஜாய், பிரதமர் பஹோனர் ஆகியோர் உட்படப் பலர் குண்டு வெடிப்பினல் கொலைசெய்யப்பட்டுள்ளனர். இதற்கு முன்பு ஈரானிய முதலாளித்துவ வெறி அரசினல் உள்நாட்டில் இடதுசாரிகளுக்கெதிரான படுகொலைச் சம்பவங்களும் மற்றும் அங்குள்ள தேசியஇனங்களுக்கு எதிரான அடக்குமுறைச் சம்பவங்களும் இடம்பெற்று வந்தன என்பது குறிப்பிடத்தக்கது. இச்சம்பவங்களுக்கான காரணங்களைப் பலரும் பலவிதமாகக் கூறினலும் இதன் அடிப்படைக் காரணங்களைப் பார்க்கவேண்டியது அவசியம்.

ஈரானில் இஸ்லாமிய மத உணர்வுகள் ஆழமாகவேரூன்றி இருந்தது. ஆனல் ஏகாதிபத்திய எடுபிடியான மனனர் ஷாவின் அடக்கு முறைகளும் [illegible] பத்தியத்திற்கெதிரான ஒரு மக்கள் கிளர்ச்சியாக எழுந்தது. ஆனல் இவ்வெழுச்சியை ஒரு பொருளாதார அடிப்படையிலான மாற்றத்திற்கு வித்திட எடுத்துச் செல்ல விடாமல், ஈரானில் இருக்கக்கூடிய மத வெறியர்களும்,முதலாளித்துவ எண்ணப் பாடுடையவர்களும் ஏகாதிபத்தியத்திற் கெதிரான 'இஸ்லாமிய கலாச்சாரப் புரட்சி' என்ற கோஷங்களையும், பிரச்சாரங்களையும் தீவிரப்படுத்தி உண்மையான மக்கள் போராட்டத்தின் தன்மையைத் திசைதிருப்பினர். அங்குள்ள சாதாரண பாமர மக்களின் எண்ண அபிலாசைகளைப் பிரதிபலித்து, சமூக பொருளாதார அரசியல் விமோசனத்திற்கு வித்திட ஓர் உண்மையான அமைப்பு மக்கள் மத்தியில் வேரூன்றிவருவதை விரும்பாத உள்ளூர் பூர்ஷுவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யேற்றப்பட்ட காலந்தொட்டு இலங்கையை முக்கியமாக மலையகத் தேயிலைத் தோட்டங்களைத் தாயகமாகக் கொண்டவர்கள்,

200 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கி தொடர் சந்ததிகளாகவே இருந்து வந்துள்ளனர். இன்றும் உழைக்கும் வர்க்கத்தினராக இலங்கையில் இருந்து வருகின்றனர்.

ஆங்கிலேயரின் ஆட்சியில் முதலாளித்துவ மான பொருளாதார அமைப்பு இலங்கையில் வளர்ந்து வரும் காலத்தில் உலக ரீதியில் ஆங்கிலேயரால் கைக்கொள்ளப்பட்ட கட்டுப் பாடற்ற கொள்கையினால் இந்தியாவிலிருந்து பணம் தேடும் நோக்குடன் இலங்கைக்குப் பலர் வந்தனர். இவர்கள்தான் இந்திய வம்சாவழியினர். இவர்களின் நோக்கம் தோட்டத் தொழிலாளரின் நோக்கிற்கு எதிர்மாறானது.

இவர்கள் தம் நோக்கிற்குச் சாதகமாக தோட்டத்தொழிலாளர்களை உபயோகிக்க முயன்றார்கள். இல்லாவிட்டால் இலங்கைத் தோட்டத் தொழிலாளருக்கென ஒரு தொழிற்சங்கம் தொழிலாளர்களாலேயே ஆரம்பிக்கப்பட்டிருக்கும். இவர்கள் எந்தக் காலத்திலும் தோட்டத் தொழிலாளரின் நலனில் அக்கறை காட்டியதில்லை. இல்லாவிட்டால் வாக்குரிமை பறிக்கப்பட்டபோதும், தமிழ்த் தொழிலாளர்களைப் பாதிக்கும்வண்ணம் தோட்டங்கள் தேசிய மயமாக்கப்பட்ட போதும் இவர்கள் ஒரு பெரும் போராட்டத்தையே நடத்தியிருப்பார்கள்.

தோட்டத் தொழிலாளர்களின் அன்றாட உழைப்பு பற்றியும், ஊதிய உயர்வு பற்றியும், வம்சாவழித் தலைவர்கள் கருணை காட்டினார்களே தவிர அவர்களின் உரிமைக்காகவோ, அல்லது உடமைக்காகவோ போராட முனையவில்லை.

இந்த வகையில் பார்க்கும்போது மலையகத் தொழிலாளரின் அரசியல் உரிமைக்காகவும், ஏன் தமிழ்த் தேசிய இனத்தின் நலனுக்காகவும் வித்திட்டவர்கள் தமிழரசுக் கட்சியினரே. ஆனால் நடுத்தர வர்க்க சிந்தனையையும் அபிலாசையையும் பிரதிபலித்து அதன் அடிப்படையிலேயே ஆவரங்கால் மாநாடு வரை தமிழ் பேசும் மக்களின் அரசியல் இருந்து வந்தது.

1977ம் ஆண்டு தேர்தல் விஞ்ஞாபனம் தமிழ் பேசும் மக்களின் சுய நிர்ணய முடிவு பற்றியதே ஆகும். சிங்கள அரசியல்வாதிகளின் இனவெறிக் கொள்கையும், குடியேற்றத் திட்டங்கள் மூலம் இன ஒடுக்கல் செய்வதுமான சூட்சுமத்தை அனுபவரீதியாக அறிந்துகொண்ட தமிழ் பேசும் மக்கள் தமிழர்கள் ஒரு ஆட்சி அமைக்கவேண்டும் என எண்ணி, அதற்காக திடசங்கற்பம் செய்து கொண்டது அர்த்தபுஷ்டியான அரசியல்நெறியே.

தமக்கென ஒரு நாடு கோருவது தமிழ் பேசும் மக்களின் ஆதர்ஸ உரிமையாகும். இதை யாரும் மறுக்க முடியாது. இந்த ரீதியில்தான் பல இடது சாரிகளான சிங்கள மார்க்சீய சிந்தனையாளர்கள் தமிழ் பேசும் மக்களின் ஏகோபித்த அபிலாசையைப் பிரதிபலிக்கும் வண்ணம் அவர்களின் சுயநிர்ணய உரிமையையும், மனதில் கொண்டு கருத்துத் தெரிவிக்கின்றார்கள். ஆனால் அவர்கள் அணுகு மார்க்கங்களில் கருத்துக் குளறுபாடுகளும், அஃகோண கோணல் பாடுகளும் காணக்கூடியதாக இருக்கிறது. இல்லாவிட்டால் மேற்படி கருத்தைத் தெரிவிக்கும் ''கினிப்புரா'' என்ற சிங்கள மார்க்சீய சிந்தனையாளர்களால் லண்டனில் கூட்டப்பட்ட கருத்து விளக்கப் பிரச்சாரக் கூட்டத்திலும், வேறு பல இடங்களிலும் தோழர் ரோகண தாம் ''பிரிவினை''யை ஆதரிக்கவில்லை என்று பட்டவர்த்தனமாகக் கூறியிருக்க மாட்டார். இதையேதான் தங்கள் புரட்சிகரக் கொள்கைப் பிரகடனத்திலும் ஜே. வி. பியினர் கூறுகிறார்கள்.

மார்க்சீய லெனினிஸ சித்தாந்த அடிப்படையில் இலங்கைவாழ மக்கள் இனவாரி அடிப்படையில் தனித்தியங்குவதற்கான சுய நிர்ணய உரிமை உண்டு என்ற கருத்தை நாசூக்காகவும் வெளிப்படையாகவும் தெரிவிக்கும் போது பிரிவினையை தாம் ஆதரிக்கப் போவதில்லை எனவும், அப்படி பிரிவினைக்காக தமிழ் இளைஞர்கள் போராடும் போது தம் இயக்கத் தோழர்கள் பாராமுகமாக இருப்பர் எனவும் தெரிவித்திருப்பதிலிருந்து அவரது சிந்தனைக் குழப்பத்தை ஊகிக்க முடிகிறது. முன் கூறியபடி அவர் ஒரு மார்க்சீயவாதி மட்டுமல்ல புரட்சிவாதியும்கூட.

ஆனால் இன்று இவர்களைப் பொறுத்த மட்டில் இங்குள்ள அடிப்படைப் பிரச்சனையை அணுகுவதில் அல்லது இப்பிரச்சினையை அவதானிப்பதற்கு தர்க்கீக அடிப்படையில் கிரகித்துக் கொள்ள ஒரு மார்க்சீயப் புரட்சிவாதிக்கு வேண்டியதும் அவசியமானதுமான சிந்தனை தேர்ச்சியில் ஒரு தேக்கத்தை காண முடிகிறது. இல்லாவிட்டால் இந்த முரண்பாட்டைக் காட்டும் மேற்படி அபிப்பிராய கருத்துக்களை ரோகண தெரிவித்திருக்க மாட்டார் அதாவது தமிழ் மக்களின தனித்தியங்கும் உரிமையை மறுக்காது ஆமோதிக்கும்போது தமிழர்கள் தம் போராட்ட நோக்கை எதேச்சை பண்ணுவது இந்த முரண்பாட்டை எடுத்துக் காட்டுகின்றது. மேற்படி முரண்பாடு ஜே. வி. பி. தோழர்களிடம் மட்டுமல்ல தமிழர்களின் சுய நிர்ணயம் பற்றிக் கருத்து தெரிவிக்கும் ஏனைய இடதுசாரிகளிடமும் காணக்கூடியதாக இருக்கின்றது. மேலும் அடுத்தமுறை பார்ப்போம்

# ஆபிரிக்காவில் ஆதிக்கவெறி

## அங்கோலாவினுள்தென்னாபிரிக்கா

# ஊடுருவல்

**தென்னாபிரிக்க துருப்புக்கள் அங்கோலாஎல்லைப் பிரதேசத்தினுள் 75 மைல்கள் வரை ஊடுருவிச் சென்றுள்ளன. இவை ஐ.நா. சபையின் சாசனத்திற்கே முரணானவை.**

அந்நிய நாடுகளின் சுரண்டல் பிடியிலிருந்து நாளுக்கு நாள் விடுதலை பெற்றுவரும் ஆபிரிக்க நாடுகளில், அமெரிக்க மற்றும் ஏகாதிபத்தியங்கள் தங்கள் நிலையை நிறுத்திக் கொள்ள எத்தனித்து வருகின்றன என்பதை தென்னாபிரிக்காவின் நடவடிக்கைகள் வலியுறுத்துகின்றன.

ஐரோப்பாவில் நேட்டோ நாடுகள் மூலம் தனது இராணுவ பலத்தை ஸ்திரப்படுத்தியுள்ள அமெரிக்கா, மத்திய கிழக்கில் இஸ்ரவேல் மூலம் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதுபோல், ஆபிரிக்காவில் தென்னாபிரிக்கா மூலம் தனது பலத்தை விஸ்தரித்து ஆபிரிக்க நாடுகளுக்கெதிரான தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட முயற்சி எடுத்து வருகின்றது. இதன் எதிரொலியாகவே அங்கோலாவினுள் தென்னாபிரிக்கா ஊடுருவல் நடாத்தி தனது பலத்தைக் காட்ட முயன்று வருகின்றது. இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையில் ஆணிசேரா நாடுகளால் கொண்டுவரப்பட்ட பிரேரணையை அமெரிக்கா தனது ''வீட்டோ'' அதிகாரத்தைப் பயன்படுத்தி முறியடித்துள்ளது. இங்கு தான் அமெரிக்காவின் சுயரூபத்தை நன்கு தெரிந்து கொள்ளவேண்டும்.

தென்னாபிரிக்காவின் மிலேச்சத்தனமான ஆதிக்கப் பிடியினுள் சுரண்டலினாலும், அடக்கு முறைகளாலும் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்ற நமீபிய மக்கள் தமது விடுதலைக்காகப் போராடுவதை அறவே துடைத்தொழிக்கும் நடவடிக்கையில் தென்னாபிரிக்க அரசும் அதன் எஜமானாகிய அமெரிக்காவும் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றன. இந்த நடவடிக்கையின் தொடர்ச்சியாகவே இன்று அயல் நாடான அங்கோலாவினுள்ளும் ஊடுருவத் தொடங்கியுள்ளது. அங்கோலா மக்களின் விடுதலைக்கு ஊறு விளைவிக்கும் அங்கோலா எதிர்ப் புரட்சியாளர்களுக்கு தென்னாபிரிக்க எல்லையினுள் சகல வசதிகளையும், உதவிகளையும் தென்னாபிரிக்கா செய்து வருவது தெரிந்ததே. இதற்கும் மேலாக அங்கோலா அரசு நமீபிய மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு உதவி வருகின்றது என்ற காரணத்தைச் சுட்டிக்காட்டி அங்கோலா மீது படையெடுத்துள்ளது. இந்த நிலையில்தான் தென்னாபிரிக்காவின் நடவடிக்கை நமீபிய மக்களுக்கு எதிரானது மட்டுமல்ல, அங்கோலாவுக்கும் எதிரானது மட்டுமல்ல ஆபிரிக்க நாடுகள் அத்தனைக்கும் விடுக்கப்படும் எச்சரிக்கை என்பதைக் கருத்திற் கொள்ளவேண்டும்.

# பிரச்சனைகளுக்கு விரைவில்

கும்பல் அதை எவ்வளவுதூரம் மழுங்கடித்துத் தங்கள் வர்க்க நலன்களைப் பேணமுடியுமோ அந்தளவு தூரத்திற்கு அது தீவிரமாகச் செயற்பட்டு தன் நிலைப்பாட்டை நிலை நிறுத்தியது. அது மட்டுமல்ல அந்த உண்மையான மாற்றத்திற்கு வித்திட முனைந்தவர்களை எதிரிகளாக்கி அழித்திடவும் கங்கணம் கட்டியது. ஆனால் முதலாளித்துவ அமைப்பினுள்ளேயே இருக்கக்கூடிய முரண்பாடுகள் இன்று அவர்களையே அழித்துக்கொள்ளும் நிலைக்கு தொடர்ந்தும் இட்டு வருவதை அண்மைச்சம்பவங்கள் மேலும் மேலும் புட்டுக்காட்டி வருகின்றன. ஈரான் இன்று அழிவுப்பாதையில் சென்றுகொண்டிருக்கின்றது என்று ஓரளவு சந்தோசத்துடன் கூறும்சிலர், உண்மையில் இன்றைய நிகழ்வுகள் ஈரானிய மக்களின், ஏகாதிபத்தியத்திற்கும், முடியரசுக்கும், முதலாளித்துவத்திற்கும் எதிரான போக்கின் தன்மையே என்பதைக் கவனிக்கத் தவறிவிடுகிறார்கள்.

எனவே, இப்பிரச்சனைக்கு நிரந்தரதீர்வு கிட்டுமா? என்று கேட்கும்போது, நிச்சயமாகச் சாதாரண பாமர மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளைப் பிரதிபலித்து, அவர்களை ஒரு பலம்வாய்ந்த மக்கள் சக்தியாகத் திரட்டி, ஈரானின் சமூக பொருளாதார அரசியல் மாற்றத்திற்கான ஒரு போராட்டக் கட்டத்திற்கு, தொடர்ந்து வரும் பிரச்சனைகள் வழிவகுத்து வருகின்றன என்பதில் எவ்விதஐயமுமில்லை. வெறுமனே ஆட்சியாளர்களை மாற்றியமைப்பதன் மூலமோ அன்றி இன்றிருக்கக்கூடிய தலைமைப் பீடத்திலிருந்து சிலரைத் தூக்கிவீசுவதன்மூலமோ ஓர் உண்மையான மாற்றம் ஏற்பட்டுவிடும் என்றால் அது முடியாத காரியம். எனவே அங்கிருக்கக்கூடிய தலைமைத்துவத்தின் பிடியை அடியோடு மாற்றியமைப்பதன்மூலம் மட்டுமல்ல, [illegible] பொருளாதார மாற்றத்தைக் கொண்டுவரக்கூடிய ஒரு ஸ்திரமான தலைமையைக் கொண்டு வரவேண்டியது அவசியம். அப்போதுதான் ஈரானின் பிரச்சனைகளுக்கு நிரந்தரத் தீர்வு ஏற்படும். இதற்கான அடிப்படைச் சூழ்நிலையை உருவாக்குவதில் அங்குள்ள விடுதலை இயக்கமாகிய ப(F)டாயின் மேலும் மேலும் வலுவடைந்து வருகின்றதென்பதில் எல்வித ஐயமுமில்லை. இந்தச் சூழ்நிலையை இன்றிருக்கக்கூடிய முதலாளித்துவ தலைமைப் பீடத்தின் வெற்றுத் தனங்களின் மூலமும், அவர்களது இஸ்லாமிய மதவெறி ஆதிக்க நடைமூலமும் ஏற்பட்டுவரும் சீரழிவுகள் உருவாக்கிவருகின்றன. எனவே அந்தச் சூழ்நிலையின் மூலம் எழக்கூடிய உண்மையான மாற்றம் வெகுதூரத்திலில்லை இம்மாற்றம் வெறுமையான போக்கு மட்டுமல்ல இயங்கியல் நியதியும்கூட என்பதை எந்தத் தர்க்கீகவாதிகளும் ஒப்புக்கொள்வர். இதுவே உண்மையான முதலாளித்துவ ஏகாதிபத்திய ஆதிக்க அடக்குமுறைச் சுரண்டலுக்கு எதிரானது. ஏனைய மாற்றங்களெல்லாம் தம் வர்க்கநலன் பேணும் வெற்றுக் கோஷங்கள் என்பதை ஈரானிய மக்கள் உணரத் தலைப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களூர்

# மயிலங்காடு மக்களின் வாழ்வில் முன்னேற்றம் கிட்டுமா ?

பொன் கொழிக்கும் பூமி யென வர்ணிக்கப்படும் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்தை இக் கட்டுரையின் மூலம் படம் பிடித்துக் காட்ட முயலுகிறேன். யாழ்ப்பாண நகரிலிருந்து சுமார் ஏழுமைல் தொலைவிலும், சுன்னுகப் பட்டினத்திலிருந்து சுமார் 2மைல் தூரத்திலும் இக் கிராமம் அமைந்துள்ளது. மானிப்பாய் தேர்தற் தொகுதிக்குள் அடங்கும் மயிலங்காடு மேற்கு எல்லையாக சுன்னுகத்தையும், வடக்குஎல்லையாக குப்பிளான்-ஏழாலையையும், கிழக்கு எல்லையாக தெற்குப் புன்னாலைக்கட்டுவனையும், தெற்கு எல்லையாக ஊரெழுவையும் கொண்டுள்ளது. குப்பிளான்—சுன்னுகம் வீதியும், மல்லாகம் – தெற்கு புன்னாலைக்கட்டுவன் வீதியும் இக்கிராமத்தை ஊடறுத்துச் செல்லும் இரு பிரதான வீதிகளாகும்.

## பொது ஸ்தாபனங்கள்:

சமூகநலனையும், மக்கள் நல்வாழ்வையும் கருத்திற் கொண்டு இயங்கிவரும் பொது நல ஸ்தாபனங்களில் ஸ்ரீ முருகன் கிராம அபிவிருத்திச் சங்கம், ஸ்ரீமுருகன் சனசமூக நிலையம், ஸ்ரீமுருகன் மாதர் முன்னேற்றச்சங்கம் என்பன குறிப்பிடத்தக்கவையாகும். இவற்றில் கிராம அபிவிருத்திச் சங்கம் வீதிகளின் புனரமைப்பு, கிராம முன்னேற்றம் என்பவற்றைக் கருத்திற்கொண்டு செயற்பட்டு வருகிறது. சனசமூக நிலையம் பொதுஅறிவை வளர்க்கும் பணியிலும், விளையாட்டு, நாடகங்கள் என்பவற்றில் அக்கறை செலுத்தி வருகின்றது. மாதர் சங்கம் சுகாதாரவசதி பேணுதல், கர்ப்பிணிப் பெண்களுக்கான வைத்திய வசதிகளை ஏற்படுத்துதல், சிறுவர்கள் பராமரிப்பு, விளையாட்டுக்கள், நாடகங்கள் என்பவற்றில் அக்கறை செலுத்தி வருகின்றது.

## வரலாறு :

1951-ம் ஆண்டளவில் அரசினரால் ஏற்படுத்தப்பட்ட குடியேற்றத்திட்டத்தின் மூலம் இங்கு 79 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன. ஏழாலை, குப்பிளான், புன்னாலைக்கட்டுவன் பகுதிகளில் இருந்து சமூக ரீதியாகப் புறக்கணிக்கப்பட்டு பொருளாதார ரீதியாகப் பின் தள்ளப்பட்ட மக்கள் இங்கு காணிபெற்றுக் குடியேறினர், ஒரே சமூகத்தைச் சேர்ந்த மக்களாக இருந்தபோதிலும் அவரவர்களின் பொருளாதார அந்தஸ்துத் தனிப்பட்ட செல்வாக்கு; என்பவற்றின் அடிப்படையில் முறையே 8 பரப்பு, 6 பரப்பு, 4 பரப்பு, 2 பரப்பு காணிகளைப் பெற்றுக் குடியேறினர்.

எனினும் அப்போது இங்கு குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு எந்தவிதமான குடியிருப்பு வசதிகளோ, அல்லது வேலை வாய்ப்பு வசதிகளோ ஏற்படுத்தப்படவில்லை. இதனாலேயே இன்று இங்கு வாழும் சுமார் 375 குடும்பங்களில் 315 குடும்பத் தலைவர்களும் கூலி வேலை செய்வதையே, அதாவது அன்றாடம் தமது உழைப்பை விற்றேபிழைப்பு நடத்தவேண்டிய இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டு உள்ளனர். மேலும் இக்கிராமத்தில் இன்றும் சுமார் 150 குடும்பங்கள் தமக்கென நிரந்தர வீடுகளைக் கட்டிக்கொள்ளமுடியாத நிலையில் மண்குடிசைகளில் தமது காலத்தைப் போக்கிக்கொண்டிருக்கின்றனர். இதனைவிட இன்றும் 95 குடும்பங்கள் தமக்கெனக் காணிகளைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் தவிக்கின்றனர்.

ஆனாலும் வளர்ச்சியுறுத இக்கிராமம் சுன்னுகம் பட்டினத்தை அண்டியுள்ளமையாலும், இரு பிரதான வீதிகள் ஊடறுத்துச் செல்வதனாலும், மின்சாரவசதி சில குறிப்பிட்ட பகுதிகளுக்கு உள்ளமையினாலும் வளர்ந்து வரும் முதலாளித்துவ வாதிகளின் பார்வைக்கு எட்டியுள்ளது. மிகவும் மலிந்த விலையில் இங்குள்ள வெறும் காணிகளில் பெரும் பகுதியினை வாங்கிக் கொள்ளும் சில பெரும் வர்த்தகப்புள்ளிகள் பாரிய அளவிலான பண்ணைகளையும் சில தொழிற்சாலைகளையும் ஏற்படுத்தி இங்குள்ள மக்களின் உழைப்பை மேலும் சுரண்டி வருகின்றனர். நகர்ப்புறங்களில் வாழும் வர்த்தகப்புள்ளிகள் கிராமப்புறங்களில் இவ்வாறு பெருந்தொகை காணிகளை முதலீடுகளுக்குப் பயன்படுத்தும் நோக்கோடு கொள்வனவு செய்து வருவதனால் கிராமத்து ஏழைமக்கள் எட்டிப் பிடிக்கமுடியாத அளவுக்கு காணி விலைகள் சென்றுவிடுகின்றன. மேலும் தமக்குள்ள சிறிய காணித்துண்டுகளைக் கூட விற்றுவிட்டு நடுத் தெருவில் தவிப்போரும் உள்ளர்.

## பாடசாலை :

ஏறத்தாழ 1955-ம் ஆண்டளவில் சுமார் 100 மாணவர்களுடனும் 4 ஆசிரியர்களுடனும் ஸ்ரீமுருகன் வித்தியாலயம் என்னும் பெயரில் ஒரு பாடசாலை இங்கு ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலை தன் 26 வருட வளர்ச்சியில் இன்றும் 5-ம் வகுப்புவரை மட்டுமே போதனைகளை நடாத்தி வருகிறது. இப்பாடசாலையில் 5-ம் வகுப்பில் தேறும் மாணவர்கள் 2½ மைல் தொலைவிலுள்ள குப்பிளான் விக்கினேஸ்வர வித்தியாலயத்திற்கோ, அல்லது 1½ மைல் தொலைவிலுள்ள ஏழாலை மகாவித்தியாலயத்திற்கோ அல்லது நகர்ப்புறபாடசாலைகளுக்கோ செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது. அதிலும் குப்பிளான் விக்கினேஸ்வர வித்தியாலயத்திற்கோ ஏழாலை மகாவித்தியாலயத்திற்கோ போக்குவரத்து வசதிகள் எதுவும் கிடையாது. நகர்ப்புற பாடசாலைகளுக்குச் செல்வதாயினும்கூட சுமார் ¾ மைல் தூரம் நடந்து பலாலி வீதிக்கு வந்தே பஸ் எடுக்க வேண்டிய நிலையுள்ளது. மேலும் இங்கு வாழும் மக்களின் பொருளாதார அந்தஸ்து அரசின் இலவசக் கல்வியைக் கூட முழுமையாகப் பெறுவதற்கு இடமளிப்பதாயில்லை.

தற்போது 500 மாணவர்களைக்கொண்டு விளங்கும் இப்பாடசாலையில் கடந்த வருடத்தில் 5-ம் வகுப்பில் சித்தியெய்திய 40 மாணவர்களில் விரல்விட்டு எண்ணக்கூடிய சிலர் மட்டுமே 6-ம் வகுப்பில் படிப்பைத் தொடர முடிவுசெய்துள்ளமை இங்கு அவதானிக்கத்தக்கது.

இவ்வாறு பல ஆயிரக்கணக்கான ஏழைச் சிறுவர்களின் கல்வி முளையிலே கிள்ளப்படுவதைக் கண்டுகொள்ளாத அரசியல்வாதிகள் சில நூறு மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதிப் பிரச்சனையிலே தமிழ் பேசும் மக்களின் அடிப்படைப் பிரச்சனையாகப் பிரதிபலித்துக் கூக்குரல் எழுப்பி வருவது அவர்களது வர்க்க நலன் சார்ந்ததன்மையினையே காட்டுகிறது, இருந்தும் இக்கிராமத்தில் 8-ம் வகுப்புவரை படித்த சுமார் 400 பேரும், க. பொ. த. (சா/த) வரை படித்த சுமார் 50 பேரும், க.பொ.த. (உ/த) வரை படித்த சுமார் 15 பேரும் இருக்கின்றனர். அத்துடன் 3 பட்டதாரிகளை இக்கிராமம் ஈன்றெடுத்துள்ளது.

## தொழில் :

இக்கிராமத்தில் வாழும் மக்களில் பெருந்தொகையானோர் கூலித்தொழில் புரிந்து வருகின்றனர். கட்டிடத்தொழில், தச்சுத் தொழில், விவசாயத் தொழில், கல்லுடைத்தல், சீவல் போன்ற வேலைகளில் கூலிகளாக அமர்த்தப்படுகின்றனர். சுமார் 25 பேர்வரையில் அரசாங்க சேவையிலும் சுமார் 15 பேர் சாரதிகளாகவும் பணிபுரிகின்றனர். இவர்கள் அனைவரும் கடும் உடல் உழைப்பைக் கொண்டிருந்த போதிலும் ஏழ்மை நிலையினை விரட்டி அடிக்கமுடியாத நிலையிலேயே உள்ளனர். இங்குள்ளவர்களில் ஒரு சிலருக்குமட்டுமே விவசாயக் காணிகள் (குத்தகையாக) உண்டு. இங்கு ஆண்கள் சராசரியாக 25 ரூபாவும் பெண்கள் சராசரியாக 7 ரூபாவும் நாட்கூலியாகப் பெறுகின்றனர். இவர்களுக்கு இதனைவிட எந்தச் சலுகைப் பணமோ (Alavance) அல்லது ஊக்குவிப்புப் பணமோ வழங்கப்படுவதில்லை என்பது குறிப்பிடாமலேயே விளங்கக்கூடியதாகும். வாழ்க்கையின் அடிமட்டத்தில் வாழும் இம்மக்களில் பலர் மதுப் பழக்கத்திற்கும், புகைத்தலுக்கும் அடிமையாகி உள்ளனர் என்பது கவனிக்கத்தக்கது. இவர்களது இத்தன்மைக்கு வாழ்வின் வசந்தங்களை நுகரமுடியாமற் போனமையும் ஒரு காரணமாக இருக்கலாம்.

பல்வேறுபட்ட பிரச்சனைகளாலும் பாதிக்கப்பட்ட ஈழவர்களாகிய இம்மக்கள் தமது பிரச்சனைகளுக்கான தீர்வு ஒரு சமத்துவ சமதர்ம சமுதாய மாற்றத்தின்மூலம்தான் கிடைக்கமுடியும் என்பதனை உணரத் தலைப்பட்டுள்ளனர். ஈழத்தின் பல பாகங்களிலும் திட்டமிட்டுத் தமிழ்பேசும் மக்கள்மீது கட்டவிழ்த்து விடும் அடக்குமுறைகளுக்கு எதிராக, ஈழவர் என்ற தேசியஸ்திரணத்தை நிர்ணயிக்கும்போராட்டத்திலே பங்கெடுத்துக் கொள்வதன் மூலமாகச் சமத்துவ சமதர்ம சமுதாய ஒன்றிற்கான அடித்தளம் இடப்படவேண்டும் எனவும், இவர்கள் கருதுகிருர்கள்.

இந்த அடிப்படைச் சிந்தனைப் போக்கிலே அதன் வளர்ச்சியிலே ஏற்படும் போராட்டப் பாங்கிலே விடுதலை பெற்ற ஈழத்திலேதான் உண்மையான கல்வியின் பூரணத்துவமும் சிறந்த சுகாதார, வைத்திய வசதிகளும் பெறுவதோடு உழைப்பவனே பயனை அனுபவிக்கின்ற உன்னத நிலைமையினை அடைய முடியும் என்பதில் நம்பிக்கையுடன் முன்னேற ஆயத்தமாக வேண்டிய தன் அவசியத்தை உணருகின்றனர்.

மயிலையூர் ஜீவன்

## விவசாயக்...

(மூன்றும் பக்கத் தொடர்ச்சி)

கங்களான அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் பதவிப் பிடிப்பில்தான் இருக்கிறுர்களே தவிர, மக்களுடைய அன்றாடப் பிரச்சனைகளையும், அடிப்படைப் பிரச்சனைகளையும் அறியாத அறிவிலிகளாய் இருக்கின்றனர்.

### நாம் என்ன செய்யவேண்டும் ?

இந்த அறிவிலிகளுக்கு இத்தகைய பிரச்சனைகளை எடுத்துச் சொல்லி எதுவும் ஆகப்போவதில்லை என்பது அனுபவ உண்மை. இதற்கு அடிப்படைக் காரணம் இத்தகைய அரசாங்கங்கள் முதலாளிகளுக்கும், போடியார்களுக்கும் சொகுசான வாழ்வைத் தேடிக்கொடுக்க வந்தவைகளே. இவ்வகையில் ஒருவர்க்கம் வாடிவதங்கவும் அதன்மீதேறிச் சவாரிசெய்யும் முதலாளி வர்க்கமும் நிலையாகவே இருக்க வழிசமைக்கும் சமூக மைப்பு முறையை நாம் மாற்றி அமைக்க வேண்டும். அப்போது இச்சமூக அமைப்பு முறையைப் பேணவரும் அரசாங்கங்கள் மக்களால் தூக்கி எறியப்படுகிறது.

தம்பலகாமக் கிராமத்தின் எடுத்துக்காட்டுப் போலவே பெரும்பாலான கிராமங்கள் காணப்படுகின்றன. இங்கு வாழும் ஏழைகளுக்கு விடிவை அரசாங்கங்களல்ல அம்மக்களாலேயே ஏற்படுத்தமுடியும்.

இதற்கு ஏழை விவசாயிகள் சமூக மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய தகுந்த தலைமையின் அங்கங்களாகி ஏனைய தொழிலாளர்களுடன் தம்மை இணைத்துக்கொண்டு சமூக மாற்றத்திற்கான எழுச்சியில் இறங்கவேண்டியதே ஒரேவழி. இந்தப் புரட்சியில்தான் விடிவதற்கான அத்திவாரமிடப்பட்டிருக்கிறது.

உங்கள் ஆக்கங்களை 'தர்க்கீகம்' வரவேற்கின்ற, அதே வேளையில் தர்க்கீகத்தை நீங்கள் திறனாய்வு செய்யலாம். அதன் மூலம் 'தர்க்கீகம்' மேலும் தன்னை செழுமைப்படுத்திக் கொள்ளும். உங்கள் ஆக்கங்கள் எங்கள் சமூக நிலையை எடுத்துரைப்பவையாகவும் சமூக மாற்றத்தைக் கோருபவையாகவும் அமையட்டும்.

"தர்க்கீகம்"
த. பெ. எண். 103, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழவர் பிரச்.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரித்து, தம் சுரண்டலை நீடிப்பதற்காக ஊக்குவிக்கும் ஒரு ஆயுதமே. சமத்துவ சமதர்ம ஆட்சியின் கீழ் தான் இனவாதம் மறையும். இதற்கு அவசியமான அடிப்படை மாற்றத்தை உருவாக்குவதில் தோட்டத் தொழிலாளிகளின் பங்கு முதன்மையாது, என்பதை யாரும் மறுக்கமுடியாது. ஆனால் இலங்கை பூராவும் தொழிலாளி வர்க்கத்தின் விடுதலையும், விமோசனமும் தமிழ் பேசும் மக்களின் விமோசனத்திலும் அவர்களின் முழு விடுதலையிலும் தங்கி, இணைந்து, நிற்கும் இன்றைய காலகட்டத்தில், மொழி ரீதியில் இனங்கண்டு தாக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களின் முதுகெலும்பான தோட்டத் தொழிலாளர்களைப் பல விதத்திலும் சின்னாபின்னப்படுத்தி அதன் தலைமைப் பீடத்தை மேலும், மேலும் அரசு கைக்குள் தள்ளுவதன் மூலம்தான் தமிழ் பேசும் மக்களின் ஏகாதிபத்தியத்திற்கெதிரான போராட்டத்தை மழுங்கடிக்க முடியும். இந்த வகையில், உழைத்துக் கொட்டி சமூகச் செல்வங்களைப் பெருக்குமிந்த ஏழை எளியவர்கள், உழைப்பாற்றலையும், உடமையையும் ஏகாதிபத்தியத்திற்கும் அதன் உள்நாட்டுக் காவலர்களுக்கும் படைத்து விட்டு, யாவரும் பணிந்து நிற்கவேண்டுமாயின், அவர்களின் குமுறல்களையும், கிளர்ச்சியையும், புரட்சியையும் அடக்கித்தான் தீரவேண்டும். இனவாதம் முதலாளித்துவத்தின் "சமூக எதிர்ப்பின்" ஒரு வடிவமே. இந்த ரீதியில் பார்க்கும்போதுதான் உழைக்கும் மக்களின் தலைவர்கள் என வரிந்து கட்டிக்கொள்ளும் தொழிற் சங்க வாதிகளின் வாதத்தின் வெற்றுத் தன்மையை எம்மால் புரிந்து கொள்ளமுடியும்.

## பின்னணி என்ன?

அத்தோடு, எப்படி அமெரிக்க உளவு ஸ்தாபனம் (C.I.A.) இலங்கையில் தொழிற் சங்கங்களினுள் ஊடுருவி தொழிலாள வர்க்கத்தின் போராட்டங்களையும், அவர்களின் எண்ணப் பாங்கையும் சிதைக்க முயல்கின்றது என்று அண்மையில் "நேஷன்" (Nation) பத்திரிகையில் வந்த ஆய்வை மனதில் கொண்டு, சங்கிலித் தொடர்போல் நடந்த அண்மைக் காலச் சம்பவங்களை நோக்குவோமானால், இவை வெறும் நிகழ்வுகளல்லாமல் திட்டமிட்ட சதியின் தொடர்பா? என்று கேட்கத் தோன்றுகிறது.

மேலும் வெளிநாட்டு மூலதனத்திற்கு எந்தவித பங்கமும் வரவிடாமல் அதற்காக நாடு பூராவும் ஒரு இனக் கலவரம் தோன்றாமல் அரசால் காலம் கடந்தாவது தடுக்க முடியுமானால், அம்பாறையில் நடந்த அசம்பாவிதங்களை முளையோடு கிள்ளி அதன் கொடூர அலகுகளை விஸ்தரிக்கவிடாமல் தடுக்க அரசு ஏன் முன்னெச்சரிக்கையாக தகுந்த நடவடிக்கைகள் எடுக்கவில்லை?

## எவை தூபமிட்டன?

அண்மைக் காலச் சம்பவங்களுக்கு கூட்டணியின் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல் பிரசாரத்தில் பேசிய பேச்சுக்கள்தான் முக்கிய காரணம் என்று சிங்கப்பூரில் அதிவிவேகத்தனமாக காமினி திசநாயக்கா பேசியிருந்தாலும், உண்மையில் எதிர்க்கட்சித் தலைவருக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையின்போது அநாகரீக முறையில் பேசிய பேரினவாதப் பேச்சுக்கள்தான் இவைக்குத் தூபமிட்டன என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். முக்கியமாக பாராளுமன்ற உறுப்பினர் திரு. சரத்முத்தெட்டுவேகம பாராளுமன்றத்தில் கூறியது போல், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் தொடர்ந்து சிங்கள மக்களிடையே நடந்த, தமிழ் பேசும் மக்களுக்கெதிரான தீவிர பிரச்சார வேலைகள்தான் (சுவரொட்டிகளும், துண்டுப் பிரசுரங்களும்) அண்மைக்காலச் சம்பவங்களுக்கு தூபமிட்டவை என்பதை எந்த ஒரு சுய சிந்தனையாளனும் மறுக்கமாட்டான். திரு. சரத்முத்தெட்டுவகம கூறியது போல் இதில் அமைச்சர்களினதும், அரச தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்களதும் பங்கென்ன? உண்மையில் அராங்க ஆணைக்குழு இவர்களை அடையாளம் காட்டுமா? அவ்வாறே காட்டினாலும் தண்டிக்கும் சக்தி அரசுக்கு இருக்குமா? இவைதான் இன்று தமிழ் பேசும் மக்களைத் துளைக்கும் கேள்விகள்.

## இயங்கியல் முடிவு என்ன?

எது எப்படியாயினும் ஒன்றுமட்டும் நிச்சயம், சங்கிலித் தொடர்பான அண்மைக்காலச் சம்பவங்கள் ஏகாதிபத்தியத்துடன் இணங்கிய சிங்கள எதேச்சாதிகார அரசின் சதித் தொடரின் ஒரு பகுதியே. ஏன் இந்தச் சதி? இதன் மர்மம்தான் என்ன? இலங்கையின் இன்றைய காலகட்ட நிலையின் உண்மைச் சூழ்நிலையை (Objective Condition) இயங்கியல் ரீதியில் ஆய்வதன் மூலம்தான் இதற்கு விடைகாண முடியும். தமிழ் பேசும் மக்கள் பொதுவான கலாச்சாரத்தாலும், மொழியாலும், பொருளாதாரத்தாலும், எல்லையாலும் இணைக்கப்பட்ட ஒரு தனித் தேசிய இனம். மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் இந்தத் தேசிய இனத்தின் முதுகெலும்பு. ஏகாதிபத்தியத்தின் இறுக்கமான பிடியிலிருந்து விடுபட அதன் மென்மையான பகுதியை வெட்ட வேண்டும் என்ற புரட்சிப் புரவலனின் வாக்குக்கமைய, தமிழ் பேசும் மக்களின் உரிமைக்கும் உடமைக்குமான புரட்சிப் போராட்டம் ஏகாதிபத்தியத்திற்கெதிரான போராட்டமே. இந்த நிலையில் எதேச்சதிகார அரசு தமிழ் பேசும் மக்களின் போராட்டத்தைக் கரைக்க முயல்வது இயல்பே. இந்த வகையில்தான் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களும், சாதாரண இஸ்லாமியத் தமிழர்களும் கோடூரமாகத் தாக்கப்பட்டார்கள்.

இப்படியாயின் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களின் விமோசனத்திற்கு மார்க்கம்தான் என்ன? தமது மூதாதையர் நாட்டிற்குத் திரும்பிச் செல்வதில்தான் இவர்களின் விமோசனப் பாதை அமைகிறது என்று தோட்டத் தொழிலாளர் மேல் ஏகபோக உரிமை கொண்டாடும் சில தொழிற் சங்கங்கள் புரட்டு வாதம் செய்கின்றன. இந்தப் புரட்டர்களின் வாதம் காலத்திற்கொவ்வாத அர்த்தமற்றது. ஏகாதிபத்தியத்தின் சூழ்ச்சிக்கு இசைந்து, பின்வாங்குவது ஒன்றாகும்.

நாம் இந்த நாட்டின் மக்கள், இரண்டாந்தரப் பிரஜைகளல்ல என்று அடித்துகூறி தமது முழு உரிமைக்காகவும், சுதந்திரத்திற்காகவும், அரசியல் அகதிகளாக்கப்பட்ட போதிலும், இந்திய ஏகாதிபத்தியத்தின் ரத்தங்கள் என்று ஒதுக்கப்பட்ட போதிலும் வராதது வரினும் காலம் காலமாகப் போராடிய இவர்கள், தமது உழைப்பையும், உடமையையும் ஒரு சிலருக்காக அர்ப்பணித்து உழைத்துக் கொட்டி எதுவுமே பெறாமல் சமூக செல்வங்களைப் பெருக்கி உழுத்துப் போன இந்த ஏழை எளியவர்கள் எதற்காகப் போராடினார்களோ அதையே தகர்த்தெறியும் வகையில் அமையும். இந்தப் புரட்டர்களின் வார்த்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

உண்மையில் இவர்களின் விமோசன மார்க்கமென்ன? இன்றைய காலகட்டத்தை ஆராயும்போது ஒரேயொரு முடிவினால்தான் இதற்கு விடையளிக்கலாம். உழைப்புச் சக்தியை முழுக்க முழுக்க உறுஞ்சி, உழைப்பாற்றலை விரயம் செய்யும் முதலாளித்துவத்திற்கெதிராக அமையும் தமிழ் பேசும் மக்களின் புரட்சிப் போராட்டத்திற்கு தலைமை தாங்கி முன்னெடுத்துச் செல்வதன் மூலம்தான் தமிழ் பேசும் பாட்டாளி வர்க்கம் தனது விமோசனத்திற்கும், சிங்களப் பாட்டாளி வர்க்கத்தின் சுபீட்சத்திற்கும் வழிவகுக்க முடியும். இதுதான் இன்றைய சூழ்நிலைக்கேற்ற நியதியும்கூட,

### தணிக்கை

ஸ்ரீலங்கா அரசினால் பிரகடனப் படுத்தப்பட்டுள்ள அவசரகால நிலமையின் கீழ் பத்திரிகைச் செய்தித்தணிக்கை அமுலில் உள்ளது.

# ஊதிய உயர்வு....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய தேசியக் கட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள லங்காதேசிய தோட்டத் தொழிலாளர் சங்கமும் கோரிக்கை விடுத்தன. ஆனால் மாதத்தில் 18 நாட்கள் வேலைக்கே நிச்சயமற்ற நிலையில் வாழும் ஏழைத் தொழிலாளர்கள் தமக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான சம்பள உயர்வைப் பெற லட்சக்கணக்கில் வேலை நிறுத்தம் மேற்கொண்டனர்.

இவ்வேலை நிறுத்தம் தொடர்பாகத் தொழிற் சங்கங்களுக்கு ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்தச் சபையின் (ஜனவசம) பொது முகாமையாளர் திரு. கே. டி. ரத்நாயக்கா எழுதியுள்ள கடிதத்தில் ரூபா 70 சம்பள உயர்வு தோட்டத் தொழிலாளருக்கு வழங்கப்படுவதில் சபையின் விருப்பு — வெறுப்பை விட அரசாங்கத்தின் கொள்கையே கவனிக்கப்படவேண்டும் எனத் தெரிவித்துள்ளார். இதிலிருந்து இன்றைய அரசு தோட்டத் தொழிலாளர்பற்றி என்ன நிலைப்பாடு கொண்டுள்ளது என்பது தெளிவாகின்றது.

மேலும் செப்டம்பர் 4–ம் திகதி தொழிற் திணைக்களத்திற் கூடிய சம்பள நிர்ணய சபை. தேயிலைத் தோட்டத் தொழிலாளருக்குச் சம்பள உயர்வு வழங்குவதில்லை எனத் தீர்மானித்துள்ளது. தோட்டத் தொழிலாளர்கள் சார்பில் தொழிற் சங்கப் பிரதிநிதிகளும் தொழில் தருநர்கள் சார்பில் வி. வன்னிநாயக்கா, எம். எஸ். பெர்னான்டோ, வி. ஆர். டி. ஹெட்டியாராச்சி, எம். எம். றொட்றிக்கோ, ஜே. சமரசிங்க உட்பட மூன்று நியமன அங்கத்தவர்களும் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் சம்பள உயர்வு சம்பந்தமான பிரேரணை விவாதத்தின் பின்னர் வாக்கெடுப்புக்குவிடப்பட்டது. பிரேரணைக்குச் சார்பாக 7 பேரும். பிரேரணைக்கு எதிராக 8 பேரும் வாக்களிக்க தோட்டத் தொழிலாளருககுச் சம்பள உயர்வு வழங்குவதில்லை எனச் சபை முடிவு செய்துள்ளது.

இலட்சக்கணக்கான தொழிலாளரின் வாழ்வு ஒருசிலரின் கைக்குள் சிக்குண்டு, அல்லலுறுவதையே சம்பள உயர்வு சம்பந்தமான இப்பிரச்சனையும் காட்டி நிற்கிறது.

# தமிழ் ஈழத்.. ..

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்நகரில் ஐ.தே.கட்சியை ஐந்து கட்சிகளுள் ஒன்றாக நின்று எதிர்த்த த. வி. கூ. யினர், தொடர்ந்து நடந்த வன்செயல்களினால், அதே அரசுடன் சமரசம் பேசியதைப் பார்க்கும்போது வன்செயல்கள் கூட்டணிக்குக் கிடைத்த திட்டமிட்ட அச்சுறுத்தலாயும் இருக்கலாம். அவ்வச்சுறுத்தல்களினால் தமிழ்பேசும் மக்களுக்கான பாதுகாப்பிற்கு உத்தரவாதம் தேடி நடாத்திய பேச்சு வார்த்தைகளில், அதற்கான திட்டவட்டமான உத்தரவாதம் எதுவும் இல்லாத நிலையில், ஒப்பந்தத்தில் ஒப்பமிட்டமை, கூட்டணி தெரிந்தோ தெரியாமலோ அரசின் தேர்தல் அந்தரங்கத்திற்கு வழிவகுத்துக் கொடுத்துள்ளதென்றே ஐயுற வேண்டியுள்ளது. எல்லாவற்றையும் நன்கு அலசிஆராய்ந்த பின்பே கூட்டணி ஒப்பமிட்டிருக்குமாயின் 'தமிழீழம்' பற்றி 6 மாதம் பேசாமல்விடுவது பற்றி எதுவித முடிவும் எடுக்கப்படவில்லை' என்ற பேச்சில் 'தமிழீழத்திற்கு' 6 மாத 'விடுதலை' என்ற பொருளே புதைந்து கிடக்கிறதாகும். அப்படியாயின் ஸ்ரீமாவோவின் குடியியல் உரிமையைச் சிரமப்பட்டுப் பறித்த அரசாங்கம், திரு. அமிர்தலிங்கம் உட்பட கூட்டணியினரின் 'பேச்சு உரிமையை' பேச்சுவார்த்தைகளாலேயே பறித்துவிட்டதென்று கூறுவது பொருத்தமுடையதே!

# விடுகதை வேந்தர்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

வந்த செய்தியில் திருவாளர் ஈழவேந்தன் தெரிவித்த கூற்றின்படி தர்க்கீக வாதிகளுக்கும் கொள்ளை ஒன்றிற்கும் சம்பந்தம் இருப்பதாக தெரிவித்துள்ளமை எமக்கு ஆழ்ந்த கவலையை அளித்துள்ளது. இந்த விடுகதையைப் புரிந்தோ புரியாமலோ கூறியிருப்பது தனக்கு மாத்திரமல்ல இச்சமுதாயத்திற்கும் இழுக்கொன்றைத் தேடிக் கொடுத்துள்ளார். இவர்கள் நிச்சயம் உண்மையைப் புரிந்துகொள்ளும் காலம் வெகு தொலைவில்லை. அது மாத்திரமல்ல இச்செய்தியை பத்திரிகையில் பிரசுரித்து மேலும் எம்மீது களங்கம் கற்பிக்க முயன்ற பத்திரிகையாளருக்கு எதிராக சட்ட ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்காக பிரபல சட்ட நிபுணர்கள் ஆலோசித்தும் வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

இப்பத்திரிகை ஊரெழு கிழக்கு எஸ். விக்கினேஸ்வரன் அவர்களால் யாழ்ப்பாணம் பிரதான வீதி 360–இலக்கத்திலுள்ள புனிதவளன் கத்தோலிக்க அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகச் செய்திகள்

## அமெரிக்க நியூட்ரன் குண்டு

நியூட்ரன் போர் ஆயுதங்களை உற்பத்தி செய்யவும், கையிருப்பில் வைத்திருக்கவும் அமெரிக்க ஜனுதிபதி ரீகன் அனுமதி வழங்கியுள்ளார். தீவிர கதிரியக்கத்திஞல் மனித உயிர்களைப் பலிகொள்ளக் கூடிய இக்குண்டுகள், போடப்படும் இடத்தில் கட்டிடங்களுக்கோ அல்லது ஏனைய சடப்பொருட்களுக்கோ ஆபத்து எதுவும் ஏற்படாது. இத்தகைய பயங்கர ஆயுதங்கள் அமெரிக்காவிலேயே வைக்கப்படும், எனினும் மேற்கின் நேசநாடுகளைக் கலந்தாலோசித்த பின்னர் மேற்கு ஐரோப்பாவில் வைத்திருப்பதற்கு ஆலோசிக்கப்படும்.

மத்திய ஐரோப்பாவில் டாங்கித் தாக்குதலைத் தடுக்கவும், நேட்டோ என அழைக்கப்படும் வட அத்திலாந்திக் ஒப்பந்தநாடுகளின் படை வலிமையினைப் பெருக்கவும் இக்குண்டுகள் பயன்படும் என் அமெரிக்க இராணுவத் துறையினர் கூறியுள்ளனர். அணு ஆயுதப்போரைத் தடுக்கவும், வானத்தின் கீழே ஒவ்வொரு மட்டத்திலும் பதிலளிக்க அமெரிக்கா தயாரான நிலையில் இருப்பதால் சோவியத் யூனியன் போரைத் தூண்டத் தயங்கும் எனவும் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் அலெக்சான்ட் ஹேய்க் கூறியுள்ளார்,

மூன்று வருடங்களுக்கு முன்னர் இக்குண்டு தயாராக எடுக்கப்பட்ட முயற்சியினை நேட்டோ நாடுகளின் கண்டனத்தால் முன்னுள் ஜனுதிபதி கார்ட்டர் ஒத்தி வைத்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்க விமான கட்டுப்பாட்டாளர் வேலை நிறுத்தம்

அமெரிக்காவின் 500 விமான நிலைய கட்டுப்பாட்டுக் கோபுரங்களிலும் 23 ராடர் நிலையங்களிலும் பணியாற்றும் கண்காணிப்பாளர்களும், கட்டுப்பாட்டாளர்களும் ஆகிய சுமார் 13000 பேர் அண்மையில் வேலைநிறுத்தத்தில் இறங்கி உள்ளனர். இதஞல் அமெரிக்காவின் நாளாந்த விமான சேவை 14,000 இல் இருந்து 8,000 வரை குறைக்கப்பட்டு உள்ளது.

போலந்தில் இடம்பெற்ற வேலைநிறுத்த நடவடிக்கைகளை முக்கியத்துவப்படுத்திப் பிரச்சாரப்படுத்திய அமெரிக்காவின் ஜனுதிபதி வேலை நிறுத்தக்காரர்களுக்கு வேலைக்குத் திரும்புவதற்கு காலக்கெடு விதித்ததுடன், அவ்வாறு வேலைக்குத் திரும்பாத பட்சத்தில் வேலைநீக்கம் செய்யப்படுவர் என எச்சரிக்கை விடுத்த போதும் வேலைநிறுத்தம் முற்றுப் பெறவில்லை. ஆனுல் அடுத்த கட்டநடவடிக்கையாக தொழிற்சங்க நிதியை முடக்க நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச விமானக் கட்டுப்பாட்டாளர் சங்கம் இப்பிரச்சனையை ஒட்டி விடுத்த கோரிக்கையில் அமெரிக்காவுக்குச் செல்லும் விமானங்களுக்கு அனுமதி வழங்க வேண்டாம் எனவும், அமெரிக்காவில் வேலை நிறுத்தம்செய்யும் தமது சகாக்களுக்கு ஆதரவு அளிக்கும்படியும் கோரியுள்ளது.

## அமெரிக்க இராணுவ ஒத்திகை

லிபியாவின் கரைக்கு அப்பால் இராணுவ ஒத்திகைகளில் ஈடுபடுமாறு அமெரிக்க ஜனுதிபதி ரீகன் அமெரிக்காவின் ஆருவது கடற்படைக்கு உத்தரவு பிறப்பித்தார். லிபியாவுக்குச் சொந்தமான கடற் பிராந்தியத்தில் ஒருபகுதி என லிபிய அதிபர் கேணல் கடாபி பிரகடனப்படுத்தியுள்ளசிட்ரா வளைகுடாப் பிராந்தியத்தில் சுமார் 2200 சதுரமைல் பரப்பளவில் அமெரிக்க ஆருவது கடற்படை பயிற்சியில் ஈடுபட்ட அதேசமயத்தில், லிபிய எல்லை நெடுகிலும் எகிப்து இராணுவ ஒத்திகை நடத்துவது தற்செயலாக ஏற்பட்ட ஒற்றுமையே என வாஷிங்டன் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க கடற்படைப் பயிற்சியை ஆரம்பித்த இரு தினங்களில் லிபியாவுக்குச் சொந்தமான இரு விமானங்கள் சுடப்பட்டுள்ளன. தனது கடல் ஆகாய எல்லைப் பிராந்தியத்திலேயே தனது விமானங்களை அமெரிக்கா சுட்டதற்கு லிபியா கண்டனம் தெரிவித்துள்ள வேளையில், லிபியாவுக்கு அமெரிக்கா கடும் எச்சரிக்கை விடுத்துத்தனது பயிற்சி நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போடாதிருக்கும்படி கூறியுள்ளது.

## சோவியத் யூனியனின் ஆலோசனை

எல்லா வகையான ஆயுதங்களையும் விண்வெளிக்கு அனுப்புவதைத் தடைசெய்யும் சர்வதேச ஒப்பந்தம் ஒன்று ஏற்படுத்தப்படவேண்டும் என சோவியத் யூனியன் ஐக்கிய நாடுகள் சபைச் செயலாளருக்கு ஆலோசனை தெரிவித்துள்ளது.

இதுவரை விண்வெளி தொடர்பாகச் செய்துகொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தங்கள் விண்வெளிக்கு ஆயுதங்களை அனுப்புவதைத் தடைசெய்யவில்லை என்றும், தற்போது விண்வெளியைக்கூட இராணுவமயமாக்கும் ஆபத்துக்கள் பெருகி வருவதாகவும் குறிப்பிட்டுள்ள சோவியத் வெளிநாட்டமைச்சர் திரு. குரோமிகோ இத்தகைய ஒப்பந்தம் ஒன்றிற்கு அவசர அவசியம் ஏற்பட்டுள்ளது என ஐக்கிய நாடுகள் சபைப் பொதுச் செயலாளர் திரு. குர்த் வால்ட்ஹெய்முக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் தெரிவித்து உள்ளார்.

## காம்பியாவில் இராணுவப் புரட்சி! செனகல் உதவியுடன் முறியடிப்பு!

ஆபிரிக்காவில் ஒரு சிறிய நாடான காம்பியாவில் நடந்த இராணுவப் புரட்சியில் ஆட்சி கவிழ்க்கப்பட்டதாகக் காம்பியா வாஞெலி இம்மாத முற்பகுதியில் தெரிவித்தது, அரச குடும்பத் திருமண வைபவத்தில் கலந்துகொள்ள ஜனுதிபதி சேர் டவ்டா ஜவாரு லண்டன் சென்றிருந்த சமயம் இப்புரட்சி மேற்கொள்ளப்பட்டிருந்தது. லண்டனை விட்டுப் புறப்படு முன்னர் தான் மீண்டும் ஆட்சிப்பொறுப்பை ஏற்க முடியும் என நம்பிக்கை தெரிவித்திருந்த திரு. ஜவாரு, செனகலுடன் காம்பியா கொண்டிருந்த பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தத்தைக் குறிப்பிட்டு புரட்சியை முறியடிக்க அந்நாட்டு உதவியும் பெறப்படும் எனக் கூறிஞர். ஜனுதிபதியின் குடும்பத்தவர்களையும், அரசாங்க அமைச்சர்களையும் பணயம் வைத்திருந்த கிளர்ச்சியாளர்களைச் செனகல் துருப்புகளின் உதவியுடன் முறியடித்து டவ்டா ஜவாரு மீண்டும் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளார்,

# விடுகதை வேந்தர்களின் விகற்பம்

## 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' செய்திக்கு மறுப்பு.

"வன் கொலையையும், கொள்ளையையும் எதிர்ப்பவர்கள் நாங்கள்'' என்று கூறிய புரவலன் லெனின் பாதையில் வழிவந்தவர்களாகிய நாங்கள், சமூக மேம்பாட்டிற்கும்' அதன் அரசியற் பொருளாதார விமோசனத்திற்கும் வழி வகுக்கக்கூடிய ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்த முயன்று வரும் வேளையில், இன்றைய சமுதாயத்தில் இருக்கக்கூடிய சில விடுகதை வேந்தர்களின் எண்ணப்பாட்பாட்டிற்கும், கூற்றிற்கும் முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். இவர்கள் சிந்தனைப் பாடுகளில் இருந்து வந்த குளறுபாடுகள் இன்னமும் மாற்றமடையாமல் இருப்பது மட்டுமன்றி, உண்மையான நோக்கங்கள் கொண்டவர்களைப் பற்றியும் புரிந்துகொள்ளாமல் குதம்புகின்றனர். இவர்கள் நிச்சயம் எதிர்காலத்தில் புரிந்துகொள்வார்கள் என்றே தர்க்கீகவாதிகள் நம்புகின்றனர்.

அண்மையில் "இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகையில்

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)




ஈழவர் தம்மிடர் ஈண்டு தொலைந்திட என்ன செய்ய வேண்டும்? என்ற அங்கலாய்ப்பு இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களின் உள்ளத்தில் ஆணித்தரமாக மேலும் மேலும் எழுந்த வண்ணமாகவே உள்ளது. இந்த விஞவிற்கு விடைகாண எழுந்த மேலெழுந்தவாரியான எண்ணப்பாடுகளின் வெற்றுத்தனத்தை உணர்ந்து ஆழமாகச் சிந்திக்கவேண்டிய நிலைக்கு ஈழவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். இந்த விஞவிற்கு விடைபகர முயல்பவர்கள் அதன் ஆழத்தைத் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டிய யதார்த்த சூழ்நிலையில் இன்று உள்ளனர். இதைப் புரிந்துகொள்ளும் வகையில்தான் ஈழவர்கள் தம் எதிர்கால நலனை எஃகமுடியும்.

இலங்கையில் ஒட்டு மொத்தமாக எழக்கூடிய தேசியப் பிரச்சினையை மழுங்கடித்து, நாளுக்குநாள் வீழ்ச்சியடைந்துவரும் பொருளாதார நெருக்கடியிஞல் ஏற்படக்கூடிய எழுச்சியைத் திசைதிருப்பி இரு தேசிய இனங்களுக்கிடையே இனவாதத்தைக் கூர்மையடையச்செய்து வருகின்றது, முதலாளித்துவ அரசு. இந்த நிலையில் அண்மைச் சம்பவங்கள் அந்த இரு தேசிய இன முரண்பாட்டை மேலும் மேலும் ஆழப்படுத்தி தேசிய இன தீர்வுக்கான நிலைக்குத் தள்ளுகின்றது என்பதை எந்த யதார்த்தவாதிகளும் ஒப்புக்கொள்ளாமலில்லை. எனவே இன்றைய சூழ்நிலையில் இப்பிரச்சினை எந்த வடிவத்தைக் கொண்டுள்ளது என்பதிலேயே இன்னும் சிலர் புரிந்துகொள்ள முடியாது தவிக்கின்றனர்.

இன்று எழுந்துள்ள இப்பிரச்சினை வெறும் தேசிய இனப்பிரச்சினை என்று கருத்தில்கொள்ளாமல் இலங்கையின் முதலாளித்துவப் பிடிக்குச் சாவுமணி அடிக்கப்போவது மட்டுமல்ல, இந்த முதலாளித்துவப்போக்கிற்கு இன்று உந்து சக்தியாகத் திகழும் உலக ஏகாதிபத்தியங்களுக்கும் எதிரான போக்கு என்பதை உணர்ந்துகொள்ளவேண்டியது அவசியம்.

உலக நாடுகளில் இன்று தோன்றியுள்ள நெருக்கடிகள் ஏகாதிபத்தியங்களின் ஆதிக்க முனைப்பையே காட்டி நிற்கின்றது. இதில் முக்கிய பங்குகொண்டு தனது அணுஆயுதப் படைப்பலத்தைப் பிரயோகித்து தனது சுரண்டலை மேன்மைப்படுத்திவரும் அமெரிக்காவின் நிலையை இன்றைய சூழ்நிலை அப்பட்டமாகப் புகட்டுகின்றது. அமெரிக்காவின் ஐக்கியநாட்டுப் பிரதிநிதி 'கேர்க் பற்றிக்ஸ்' அண்மையில் கொழும்பில் கூறியபடி, பொருளாதார வீழ்ச்சியை நாளுக்குநாள் எதிர்நோக்கிவரும் அமெரிக்கா தனது நிலையை ஸ்திரப்படுத்தச் சகல நடவடிக்கைகளையும் எடுத்துவரும் என்று கூறியதிலிருந்து, ஆதிக்க விஸ்தரிப்பின் மூலம் தனது சுரண்டலை மேலும் மேலும் வலுப்படுத்த முயல்கின்றதென்பதைத் தெரிந்தோ தெரியாமலோ கூறி இருப்பது அவதானிக்கத்தக்கது. இதுமட்டுமல்ல ஏனைய முதலாளித்துவ ஏகாதிபத்தியநாடுகளில் பொருளாதார வீழ்ச்சியின் தன்மையையே உள்நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் விளக்குகின்றன.

இந்நிலையில் ஏகாதிபத்தியங்களின் ஆதிக்கப்பிடியினுள் தன்னை முழுக்க முழுக்க அடகு வைத்துவரும் இலங்கை அரசு, தமிழ்ப்பேசும் மக்களின் ஈழக்கோரிக்கையை எவ்வளவுதூரம் மழுங்கடிக்க முடியுமோ அவ்வளவு தூரத்திற்குத் திட்டமிட்டுச் செயற்பட்டு வருகிறது. இந்நிலையிலேயே தமிழ்பேசும் தேசிய இனத்தின் பிரச்சினை ஒரு தேசிய இனப்பிரச்சனை மட்டுமல்ல அது சர்வதேசியப் பிரச்சனையுடன் இணைந்தது என்பதை ஆழ்ந்து சிந்திப்பவர்கள் புரிந்துகொள்வர். இதஞல்தான் தமிழ்பேசும் மக்களின் ஆதர்ச உரிமையான ஈழப்போராட்டம் இலங்கை முதலாளித்துவத்திற்கெதிரானது, மட்டுமல்ல உலக ஏகாதிபத்தியங்களுக்கும் எதிரானதாகும். இதுவே தர்க்கீகவாதிகளின் அடிப்படையான கருத்து. இது மட்டுமல்ல ஈழக் கோரிக்கையானது சிங்களம் பேசும் பாட்டாளி வர்க்கத்தின் விமோசனத்திற்கும் உந்து சக்தி என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும்.

★ ★ ★ ★

'தர்க்கீகம்' தனது 12-வது இதழை அதிக பக்கங்களுடன் சிறப்பு மலராக வெளியிடத் தீர்மானித்துள்ளது. இதற்கு உங்கள் ஆக்கங்களையும் கேள்விகளையும் அனுப்பி வைக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org